Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-884)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 10 (12.06.2003) வியாழக்கிழமை இதழ்: 251

# ரோக்கியோவில் ரணில் அறிவித்த கட்டமைப்பு; புதிய பெயரில் அமைந்த அரசின் பழைய திட்டமே!

## தெளிவான வரைபே பேச்சுக்கு வேண்டும் விடுதலைப் புலிகள் மீண்டும் வலியுறுத்து

**வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றுக்கான, தெளிவாக விபரிக்கப்பட்ட வரைபு ஒன்றை அரசாங்கம் முன்வைத்தால் மாத்திரமே, சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ள முடியும் என்ற தமது நிலைப்பாட்டை, விடுதலைப் புலிகள் மீளவும் வலியுறுத்தியிருக்கின்றனர்.**

**கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் தலைமையகத்திலிருந்து உத்தியோகபூர்வமாக நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையின்படி -**

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ரோக்கியோவில் அறிவித்த - இலங்கையின் சட்டங்களுக்குட்பட்ட தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பானது (Provisional Administrative Structure) - அவரது பழைய நிலைப்பாட்டையே, புதிய வார்த்தைகளில் கூறுவதாக அமைவதால் - அதனை விடுதலைப் புலிகள் நிராகரித்திருக்கின்றனர்.**

பிரதமாின் அறிவிப்பு - எதனையும் புதிதாக முன்வைக்காததையிட்டு, நாம் அதிருப்தியடைகின்றோம். அவர் அறிவித்த 'தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு' என்பது-

முன்னர் எம்மால் நிராகரிக்கப்பட்ட - மிகவும் வரையறைககுட்பட்ட, போதுமானதற்ற - அபிவிருத்திக்கான உயர் கவுன்சிலுக்கு வழங்கப்பட்ட புதிய பெயரே எனவும் விடுதலைப் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நாம் கேட்ட - ஆக்கபூர்வமான, திறனாற்றலுடைய அரசியல் நிர்வாகக் கட்டமைப்புக்கான வரைபாக பிரதமரின் பதில் அமையவில்லை. ரணில் விக்கிரமசிங்க - சர்வதேச

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தீவிர தேடுதல்; இரு தமிழ் இளைஞர் கைது!

(கொழும்பு)

கொழும்பு - கொட்டாஞ்சேனைப் பகுதியில், பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டையை நடத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை நடைபெற்ற இத்தேடுதல் வேட்டையின்போது, இரு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

காலை முதல் நண்பகல்வரை நீடித்த இத்தேடுதல் நடவடிக்கையின்போது, அப்பகுதிகளில் காணப்பட்ட விடுதிகள், வர்த்தக நிலையங்கள் உட்படப் பல இடங்களுக்குள்ளும் பொலிஸார் புகுந்து தீவிர தேடுதல் நடத்தினர்.

பொலிஸாரின் இத்தேடுதல் நடவடிக்கை காரணமாக - அப்பகுதியில் சிலமணிநேரம் பதற்றம் நிலவியது. இத்தேடுதலின்போது - பலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். இறுதியில் இருவர் கைது செய்யப்பட்டனர். (200)

## இராணுவ கெடுபிடிகளை எதிர்த்து இன்று மட்டக்களப்பில் ஹர்த்தால்!

(கல்முனை)

மட்டக்களப்பு மாவட்டத்தில், இராணுவத்தினரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதற்கான அழைப்பை - மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமன்றம் விடுத்துள்ளது.

அண்மைக்காலமாக - இராணுவச் சோதனைச்சாவடிகளில் அதிகரித்துவரும் சோதனைக் கெடுபிடிகள், அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு - தடுத்து வைக்கப்பட்டு வருகின்றமை ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே - இந்த ஹர்த்தால் இடம்பெறவுள்ளது.

சமாதான நடவடிக்கைகளை குழப்பும்வகையில், இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளைக் கண்டித்தும், இனிமேலும் இத்தகைய அசம்பாவிதங்கள் நடைபெறாது சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதையும் இந்த ஹர்த்தால் வலியுறுத்தவுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரோக்கியோவில் கிடைத்துள்ள நிதியுதவி வரவு-செலவுத்திட்ட பற்றாக்குறைக்கும்!

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

(ரோக்கியோ)

ரோக்கியோ உதவி மாநாட்டில் கிடைத்த நிதியுதவியில் ஒரு பகுதி, வரவு - செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிரப்பப் பயன்படுத்தப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உள்ளூர் ஊடகவியலாளர்களுக்கு ரோக்கியோவில் வைத்து அளித்த பேட்டியிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து செய்தியாளருக்கு பேட்டியளித்தபோது -

சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவியின் ஒரு பகுதியே, வரவு - செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிறைவுசெய்யப் பயன்படுத்தப்படவுள்ளது.

அத்துடன் - ரோக்கியோவில் கிடைத்துள்ள நிதியைப் பயன்படுத்துவதற்கான திட்டமிடலை மேற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அகாஷி லண்டன் செல்லவில்லை; கடிதம் வழியே முடிவுகள் தெரிவிப்பு!

(ரோக்கியோ)

தற்போதைய நிலையில் சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கக்கூடிய சூழல் இல்லை. ஆனாலும், விடுதலைப் புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இவ்வாறு ஜப்பானிய் விசேட தூதுவர் யசுசி அகாஷி தெரிவித்தார்.

ரோக்கியோ மாநாட்டின் முடிவுகளை விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் நேரடியாகச் சந்தித்துப் பேசுவதற்குத் தீர்மானித்திருந்தேன். எனினும்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

### உரும்பிராய் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில்

## சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம்; காவலாளியான முதியவர் கைதானார்!

(யாழ்ப்பாணம்)

இரண்டு சிறுமிகளைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய தான குற்றச்சாட்டில், முதியவர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டார்.

உரும்பிராய் வடக்கு - கற்பகப் பிள்ளையார் கோயில் வீதியில் அமைந்துள்ள, ஸ்ரீவசந்தா நாகபூஷணி அம்மன் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் இருக்கும், 16 வயதிற்குட்பட்ட இரு சிறுமிகளை, பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய குற்றச்சாட்டின்பேரிலேயே - அச்சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் காவலாளியாகக் கடமை புரிந்த முதியவர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

முன்னதாக - சிறுமிகள் பாலியல துஷ்பிரயோகத்திற்குள்ளான சம்பவம் தொடர்பாக - இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி, யாழ். நீதி

(10 ஆம் பக்கம் பார்டக்க)

## பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்கும் 'பொங்கு தமிழ்' நிகழ்வு இம்மாதம் 27 இல்!

### உணர்வெழுச்சியுடன் கொண்டாட மக்களைச் சந்திக்கின்றனர் பல்கலை மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாடு தழுவிய வகையில், மாபெரும் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வு - எதிர்வரும் 27 திகதி யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

"எமது நிலம் எமக்கு வேண்டும்" என்ற தொனிப்பொருளில் நடைபெறவிருக்கும் இந்த எழுச்சி நிகழ்வில் - குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கில் பொதுமக்கள் திரண்டுவந்து பங்குபற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


"நாங்கள் எங்களின் வீடுகளுக்குச் செல்வதற்காக, இராணுவத்தினரே உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்" என்ற பிரதான கோஷத்துடன், இந்த 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வு நடைபெறவிருக்கிறது.

இந்த நிகழ்வுக்கான சகல முன்னேற்பாடுகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்களின் வாழ்வில் - இயல்புநிலை ஏற்படாத நிலையில், அதற்கு இடையூறாக, மக்களது வாழ்விடங்களில் முகாமிட்டிருக்கும் படையினர் வெளியேறி, மக்களின் இயல்புவாழ்விற்கு வழிவிட

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



பஜட்டுக்கும் பகட்டுக்கும் ஒதுக்கிப்போக - மிஞ்சிறதெங்க, கெஞ்சிறதெங்க...!

# யாழ். நகரப் பகுதியிலுள்ள நீர் மனித பாவனைக்கு உதவாதது!

## சுற்றாடல் அதிகாரசபைப் பணிப்பாளர் தெரிவிப்பு

(ஆழியவளை)

யாழ்ப்பாண நகர்ப்பகுதியை அண்மித்த பகுதிகளில் உள்ள நீர், மனித பாவனைக்கு உதவாதது எனவும், இந்நீரைப் பருகுவதனால் கொடிய நோய்கள் உண்டாகும் அபாயம் உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டு வருவதாகவும், மத்திய சுற்றாடல் அதிகாரசபைப் பணிப்பாளர் டாக்டர் சண்முகராசா தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண நகரப் பகுதியில மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பரிசோதனையின் அடிப்படையில், நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டு சதவீதமான நீர் மக்கள் பாவனைக்கு பொருத்தமற்றது எனவும், அப்படி மக்கள் அருந்துவதற்குப் பயன்படுத்த வேண்டுமாயின் மாற்று வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்னும் இரண்டு வருடங்களின் பின்னர், இந்நீர் மூலம் பல்வேறுபட்ட வியாதிகள் தோன்றுவதற்கு வாய்ப்பு உண்டு எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், யாழ். நகரமையத்தில் உள்ள நீர்த்தேக்கங்களும், கழிவுகளும் நிலத்தடி நீரில் கலந்து விடுவதே இதற்கு காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது (122)

# வட-கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்; எதிர்வரும் 18 இல் முக்கிய மாநாடு!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்தவது தொடர்பான முக்கிய மாநாடு, எதிர்வரும் 18 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டுக்கு, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்ட அரச அதிபர்கள், முப்படை உயர் அதிகாரிகள், மாவட்ட தேர்தல ஆணையாளர்கள் ஆகியோருக்கு, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா அழைப்பு விடுத்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில், தற்போதய நிலைமைகள் தொடர்பான விபரங்களையும் அவர் கோரியுள்ளார்.

படையினர், விடுதலைப் புலிகள் ஆகியோரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் - முழுமையாக மற்றும் பகுதியாக உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் விபரங்களையும், இந்தச்சந்திப்பின்போது சமர்ப்பிக்குமாறு, மாவட்ட தேர்தல் ஆணையாளர்களைத் தேர்தல் ஆணையாளர் கோரியுள்ளார்.

# நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாகவே விளையாட்டரங்கப் புனரமைப்பு பணி!

## மாநகரசபை வட்டாரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

தேசிய விளையாட்டு விழாவுக்காக துரையப்பா விளையாட்டு மைதானம் புனரமைக்கப்பட்டுவரும் நிலையில் - முன்னர் இந்த விளையாட்டரங்கில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியால், புனரமைப்பு வேலைகளை முழுமையாகச் செய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது -

சில வருடங்களுக்கு முன்னர், துரையப்பா விளையாட்டரங்கில் - மலசல கூடம் அமைப்பதற்கு நிலத்தைதத தோண்டியபோது, மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நீதிமன்ற உத்தரவையடுத்து, அப்பகுதியில் கட்டட வேலைகள் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டது.

தற்பொழுதும் அந்த நீதிமன்ற உத்தரவு நடைமுறையில் உள்ளதால், அப்பகுதியில் புனரமப்பு பணிகள் எவையும் மேற்கொள்ள முடியாதநிலை இருப்பதாகவும், அப்பகுதியை தவிர்த்தே புனரமைப்பு பணிகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

**சிறு விளம்பரம்**

**வேலையாள் தேவை**

இல. 226 யாழ். கே. கே. எஸ். வீதியில் உள்ள ரஹ்மான் ஹோட்டலுக்கு உடனடியாக வேலையாள்கள் தேவை.

தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும். (376)

நிறஞ்சனாஸ் சங்கானை

விஜய், சாலினி, தாமு, ராதாரவி நடித்த

காதலுக்கு மரியாதை

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு. 3.45 (பு.நே)

BEHIND ENEMY LINE

(சி-974)

ராஜா யாழ்ப்பாணம்.

இன்று மட்டும் 2.30, 6.30

சிவாஜி, பத்மினி, பாலையா, நாகேஸ் நடித்த

தில்லானா மோகனாம்பாள்

2.30, 6.30 மட்டும்

THE ROCK THE SCORPION KING

11 முதல் 13 வரை தினசரி 10. 30. இரவு 9. 30 மட்டும்

13 ஆம் திகதி 2.30, 6.30

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ரகசியபொலிஸ் 115

(சி-973)

# முல்லை. மாவட்ட உள்ளூராட்சி திணைக்களம் பொலித்தீன் கழிவுகளைக் கொள்வனவு!

## சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை

பொலித்தீன் கழிவுப் பொருட்கள், சூழலில் நச்சுத்தன்மை ஏற்படுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு, இவற்றை மக்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு, முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் சகல பிரதேசசபைகளும், ஒரு கிலோ 100 ரூபா வீதம் பொலித்தீன் கழிவுப் பொருட்களை கொள்வனவு செய்யவுள்ளன.

எனவே, மேற்படி மாவட்டத்திலுள்ள மக்கள் - எதிர்வரும் 22 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரைக்கும், பொலித்தீன் கழிவுப் பொருட்களை, தமக்கு அண்மையிலுள்ள பிரதேச சபைகளில் கொடுத்துப் பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகின்றது.

பொலித்தீன் கழிவுப் பொருட்களினால், சூழல் மாசடைவதனைத் தடுப்பதற்கும் சூழலைப் பாதுகாப்பதற்கும் உதவுமாறு மக்களுக்கு முல்லை. மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (122)

# முல்லைத்தீவு, கிளிநொச்சியில் விசேட வைத்திய சிகிச்சைகள்!

## வவுனியா வைத்தியசாலை ஏற்பாட்டில்

வன்னிவாழ் மக்களின் நன்மை கருதி, வவுனியா மாவட்ட ஆதார வைத்தியசாலை வைத்தியர்களால்- முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில், விசேட வைத்திய சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நாளை மறுநாள் -புதுக்குடியிருப்பு வைத்தியசாலையிலும், கிளிநொச்சி வைத்தியசாலையிலும் சிகிச்சைகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சத்திர சிகிச்சை நிபுணர்களும் வருகை தரவுள்ளதால், நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் வைத்திய ஆலோசனைகள் தேவைப்படுபவர்கள் - மேற்படி சேவையினை பயன்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### வாய்த்தர்க்கம் கத்தி வெட்டில் முடிந்தது

உறவினர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம், கத்தி வெட்டில முடிவடைந்தது. நேற்று முன்தினம், ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், சின்னராசா தவராசா (வயது 34) என்பவரே காயமடைந்தவராவார். இவர், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிசைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**சமகால அரசியல் கருத்தரங்கு**

**விடயம்:-** இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வும், உலகளாவிய சவாலும் (ஓர் சமகால பார்வை)

**கருத்துரை வழங்குபவர் :-** K.T. கணேசலிங்கம் *(விரிவுரையாளர், சமூக அரசறிவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)*

**இடம் :-** கைலாசபதி கலையரங்கு

**காலம் :-** 13.06.2003 (வெள்ளிக்கிழமை)

**நேரம் :-** பி.ப.3.00 மணி (புதிய நேரம்)

*மேற்படி கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

நன்றி

(375) யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

**யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு நீர் விநியோகம் சம்பந்தமான பொருட்கள் கூறுவிலை கோரல் - 2003**

நீர்வேலிப் பகுதிக்குத் தேவையான நீர் இறைக்கும் இயந்திரம், பி.வி.சி.குழாய்கள், பொருத்துக்கள் ஆகியவற்றை யாழ்ப்பாணம் மாநகரசபை களஞ்சியத்தில் விநியோகிப்பதற்கான கூறுவிலைகள் 24.06.2003 மு.பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கூறுவிலைகளுக்கான படிவங்களை, மாநகரசபை அலுவலகத்தில் பெற்று விண்ணப்பித்தல் வேண்டும். தேவைப்படும் ஏனைய விபரங்களை மாநகரசபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்.
மாநகரசபை.
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
11.06.2003.

(சி-1082)

**பகிரங்க ஏல விற்பனை**

பண்டாரமாளிகை வளவில் உள்ள வெட்டப்பட்ட மரக்கிளைகள் எதிர்வரும் 17.06.2003 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் பிணைப்பணமாக ரூபா 50.00 செலுத்த வேண்டும். ஏனைய விடயங்களை மாநகர சபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

இ.இராமலிங்கம்,
*ஆணையாளர்,*
*மாநகரசபை, யாழ்பாணம்.*

*(சி.1081)*

**JOB ADVERTISEMENT**

**District Mine Survivors Rehabilitation Coordinator - Jaffna**

**In the framework of its partnership with UNICEF, Sarvodaya seeks a dynamic Dictrict Mine Survivors Rehabilitation Coordinator to be posted at the District Mine Action Office (Jaffna) on a full - time basis.**

**1. Duties and responsibilities**

The incumbent will liaise with all actors involved in mine/UXO survivor assistance in the District to ensure that mine survivors have access to all rehabilitation services available (notably psychosocial support, vocational training, and microfinhance programmes). S/he will maintain the Mine Survivors database, and interact with the rest of the mine action partners, i.e. demining agencies, mine risk education organizations (Iocal and international partnesr). S/he will organize workshops, training and special events on issues relating to Mine Survivor Assistance, as well as draft interest stories about mine survivors. The incumbent will also monitor the implementation of specific assistance projects (finacial aspects and substance). The working language will be English and Tamil.

**2.Qualifications required**

* Higher education and/or relevant working experience in a related field (health, sociology,business administration,ect.)
* Prior successful experience working at the community level (especially in social mobilization and empowerment) constitutes an asset
* Previous experience working with people with physical and mental disabilities constitutes an asset.
* Knowledge of the socio - economic impact of mines / UXO on people and communities
* Advocacy, training and facilitation skills
* Good planning and organization skills
* Sense of initiative and ability to work under minimum supervision
* Excellent writing and presentation skills both in English and Tamil
* Computer skills (word and excel)
* Motorbike license appreciated

If you meet the required qualifications and are interested in this post, please send your detailed BIODATA in English to the *Sarvodaya Office No.3 Fletcher Lane, Chundukuli - Jaffna,* before or on 20 June 2003

Only candidates under serious consideration will be contacted for interview.

(374)

## வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள வைத்தியர்களை வேலைக்கு திரும்புமாறு சுகாதார அமைச்சர் கோருகின்றார்!

(கொழும்பு)

அரசாங்க் வைத்திய அதிகாரிகள் சங்கம், மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தத்தைக் கைவிட வேண்டும் என்று சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன கேட்டுள்ளார்.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த வைத்தியர்கள்- நேற்றுமுன்தினம் தொடக்கம், நாடு முழுவதிலும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனால், அரசாங்க வைத்திய சாலைகளில் நோயாளர்களுக்கு சிகிச்சைகள் அளிக்கப்படாததால் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன, வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறு அரசாங்க வைத்தியர் சங்கத்தைக் கோரியுள்ளார்.

சம்பள முரண்பாடுகளைத் தீர்க்குமாறும், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு விசேட இடர்காலக் கொடுப்பனவு வழங்குமாறும் கோரியே இந்த வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டுவருகின்றது.

இது குறித்து, சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன கருத்துத் தெரிவிக்கையில் -

அரச வைத்திய அதிகாரிகளின் கோரிக்கைகள் குறித்து, சுகாதார அமைச்சு எந்தத் தீர்மானத்தையும் எடுக்கமுடியாது. அமைச்சரவையே இது குறித்த தீர்மானத்தை மேற்கொள்ளவேண்டும்.

அமைச்சரவையில் இந்த விடயம் குறித்து ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு கால அவகாசம் தேவை. இதனால், அமைச்சரவையில் இந்த விடயம் குறித்து ஆராயும் வரைக்கும் வைத்திய அதிகாரிகள் பொறுத்திருக்கவேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக நிதியமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளேன். ஏனெனில், வைத்திய அதிகாரிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதானால், மிகப்பெரிய கொடுப்பனவைச் செலுத்தவேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் - இந்தப் பிரச்சினை குறித்து ஆராய்ந்து தகுந்த முடிவு எடுக்கப்படும். இதனால், அரச வைத்திய அதிகாரிகள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு - மீண்டும் நோயாளர்களுக்குச் சிகிச்சையளிக்க முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

## ஜப்பானில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு தொடர்பில்லை என ஜே.வி.பி. மறுப்பு

(கொழும்பு)

ஜப்பானில் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விகாரைக்கு வழிபடச் சென்றபோது, ஜே.வி.பியினர் தாக்குதல் நடத்தியதாக வெளியான செய்திகளை - ஜே.வி.பி. மறுத்துள்ளது. இதுகுறித்து ஜே.வி.பி. மேலும் தெரிவித்துள்ளதாவது -

விகாரையில் வழிபாடு நடத்திய பின்னர், பிரதமர் அங்கு கேள்விகளுக்குப் பதில் அளிப்பதாகவே திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், தாமதம் ஏற்பட்டதால் கேள்வி - பதில் நிகழ்ச்சி நடத்தப்படவில்லை.

இதனால், அங்கிருந்த சிலர் கேள்விகளை எழுப்ப முற்பட்டபோது - பிரதமரின் பாதுகாப்பு அதிகாரிகளே தாக்குதல் நடத்தினர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அமைதியான போராட்டத்தில் ஈடுபட்டோரை, ஜப்பானியப் பொலிஸார் தடுக்கவில்லை. பிரதமரின் பாதுகாப்பு அதிகாரிகளே அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்று கூறியுள்ள ஜே.வி.பி - ஜப்பானிலுள்ள தமது கிளை அமைப்பு, இதுகுறித்து பொலிஸில் புகார் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

## விடுதலைப் புலிகள் - முஸ்லிம் பிரதிநிதிகள் கண்காணிப்புக்குழு முன்னிலையில் சந்திப்பு

### பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

அம்பாறை மாவட்டத்தில், முஸ்லிம் - தமிழ் மக்களுக்கிடையிலான காணி மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக - விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில், ஆலையடிவேம்பு பிரதேசத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

யுத்தநிறுத்த கண்காணிப்பு குழுவின் தலைவர் கார்ள் சேர்பேக் முன்னிலையில் நடந்த இந்தச் சந்திப்பில், விடுதலைப் புலிகளின் குழுவினர், மட்டு - அம்பாறை அரசியறதுறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தலைமையிலும், முஸ்லிம் தரப்புக் குழுவினர் - எம்.ஐ.எம்.முகைதீன் தலைமையிலும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பின்போது, முஸ்லிம் - தமிழ் மக்களுடைய காணிப் பிரச்சினைகள் குறித்து முக்கியமாக ஆராயப்பட்டன.

இரு இன மக்களிடமும் - விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வின் அடிப்படையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என இச்சந்திப்பில் இணக்கப்பாடு ஏற்பட்டதாக தெரியவருகிறது.

இந்தப் பகுதியிலுள்ள தமிழ் - முஸ்லிம் இன மக்கள் எதிர்நோக்கும் ஏனைய அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது. (07)

## வருடாந்த சம்பள உயர்வுகள் இனி உடனுக்குடன் கிடைக்கும்!

### அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

சகல அரச ஊழியர்களுக்கும், வருடாந்த சம்பள அதிகரிப்பை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக- பொது நிர்வாக, உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

வருடாந்த சம்பள உயர்வுக்கு தகைமைபெற்ற அரச ஊழியர்களுக்கு, பல வருடங்களாக அதற்கான அங்கீகாரம் வழங்கப்படாமல் இருந்துவந்தது.


இவர்களுக்கான வருடாந்த சம்பள உயர்வுக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அரசாங்கம் தற்போது தீர்மானித்திருக்கிறது. அத்துடன், இந்த வருட இறுதிக்குள் சகல அரச ஊழியர்களுக்கும் சம்பள உயர்வுகளை வழங்கவும், அனுமதி பெறப்பட்டிருப்பதாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்களின் வினைத்திறமையை அதிகரிப்பதற்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். அத்துடன், ஓய்வூதியர்களுக்கான நிலுவைக் கொடுபனவுகளும் விரைவில் கொடுத்துத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, அவர் மேலும தெரிவித்தார்.

### புலிகள் மீதான தடை அமெரிக்கா இப்போதைக்கு நீக்காது

விடுதலைப் புலிகள் மீதான தடைகளை இப்போதைக்கு நீக்கும் எண்ணம் அமெரிக்காவிற்கு இல்லையென, அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் தெரிவித்தார்.

ரோக்கியோ உதவிவழங்கும் மாநாட்டிலேயே, அவர் இதனைக் கூறினார். விடுதலைப் புலிகள் உடனடியாகப் பேச்சுக்குத் திரும்புவதன் மூலம், தமது விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டும் எனவும், அவர் அங்கு குறிப்பிட்டார்.



ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க அலுவலகத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது - பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி மங்களவிளக்கேற்றுவதையும், அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார், சங்கத் தலைவர் அருளானந்தம் மற்றும் அங்கத்தவர்களையும் படத்தில் காணலாம். (46)

## ரோக்கியோவில் கடனே கிடைத்ததாக அமுனுகம கூறியதை பீரிஸ் நிராகரிப்பு!

(கொழும்பு)

"ரோக்கியோவில் நடைபெற்று முடிந்த உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இலங்கைக்கு வழங்கப்பட்டது கடன்களே தவிர, நன்கொடையல்ல. இது நாட்டின் கடன் சுமையை மேலும் அதிகரித்துவிட்டது" -

என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்த கருத்தை, நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மறுத்துள்ளார்.

பி.பி.சியின் சிங்கள சேவையான 'சந்தேசியவுக்கு' அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அளித்த பேட்டியிலேயே, கலாநிதி சரத் அமுனுகமவின் கூற்றை நிராகரித்தார்.

ரோக்கியோ மாநாட்டில் - இலங்கைக்கு நன்கொடைகளும், இலகு கடன்களும் மட்டுமே கிடைத்தன. கடன்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

முன்னைய ஆட்சியிலும் இப்படிப்பட்ட கடனுதவிகள் பெறப்பட்டன.

வேறு பல நாடுகளும் இப்படியான இலகு அடிப்படையான கடன்களைப் பெற்றுள்ளன. அண்மைக் காலத்தில் இவ்வாறு அதிகளவிலான நன்கொடைகளைப் பெற்ற நாடாக இலங்கையே விளங்குகிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தியாவில் இருந்து கார்கள்!

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதமரின் ஆலோசனையின்பேரில் கார்கள் வழங்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக, 90 கார்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்பட இருப்பதாக நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்துள்ளார்.

கடன் அடிப்படையில், இந்திய அரசின் உதவியுடன் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கார்கள் வழங்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பாடசாலைகளில் போலிச் சான்றிதழ்கள்; சமர்ப்பிக்கும் பெற்றோர் மீது நடவடிக்கை!

### மேன்முறையீட்டு ஆணைக்குழு அறிவிப்பு

பாடசாலை அனுமதிக்காக, தவறான சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கும் பெற்றோர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று, கல்வி அமைச்சின் மேன்முறையீட்டு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இவ்வாறு தவறான சான்றிதழ்களைச் சமர்ப்பித்து, மாணவர்களைப் பாடசாலைகளில் இணைத்துக்கொள்வதால் - நியாயமாக இடம் கிடைக்க வேண்டிய திறமையான மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

பிரபலமான, முன்னணிப் பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்கே- இவ்வாறான போலிச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இதனால், போலியான சான்றிதழ்களைப் பயன்படுத்தி, பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்க்கும் பெற்றோர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என, கல்வி அமைச்சின் மேன்முறையீட்டு ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

### மாவட்ட மட்ட மெய்வன்மை போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் - எதிர்வரும் 21, 22 ஆம் திக்திகளில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தலைமையில நடைபெறவுள்ளன.

## மகாபொல கொடுப்பனவு விவகாரம் குறித்த விளம்பர யுத்தத்தில் ஜனாதிபதி -அரசாங்கம்!

(கொழும்பு)

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திடம் இருந்து பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், இருதரப்பினருக்கும் இடையிலான ஊடக விளம்பர யுத்தம் தீவிரமடைந்துள்ளது.

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்து கிடைத்துவந்த வருமானத்திலிருந்தே, ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக - பல்கலைக்கழக மாணவர்களுக்கான மகாபொல கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளாக ஜனாதிபதி செயலகம், மகாபொல நம்பிக்கை நிதியத்துக்கு நிதி ஒதுக்கீடுகளை உரியமுறையில் வழங்கவில்லை என்று, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் குற்றஞ்சாட்டி வந்தது.

தேசிய லொத்தர் சபையை ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்றதையடுத்து - மகாபொல நிதியத்துக்கான நிதிக் கொடுப்பனவுகளை வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டுத் தீவிரமடைந்துள்ளது. இது குறித்த புள்ளி விபரங்களுடன், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஊடகங்கள் மூலம், விளம்பரங்களைப் பெரியளவில் செய்துவருகிறது.

இதேவேளை, ஜனாதிபதி செயலகமும் - பதிலுக்குப் போட்டியான விளம்பரங்களை வெளியிட ஆரம்பித்துள்ளது. ஜனாதிபதி நிதியத்தில் நிதி எவ்வாறு செலவிடப்படுகிறது? மகாபொல கொடுப்பனவுகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா போன்ற புள்ளி விபரங்களுடன் கூடிய விளம்பரங்களை ஜனாதிபதி செயலகம் வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மெதடிஸ்த திருச்சபையின் மாவட்ட அவைக்கூட்டங்கள்!

## இருபது வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில்

(கல்முனை)

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வட - கிழக்கு மாவட்ட அவைக்கூட்டங்கள், யாழ்ப்பாணம் மெதடிஸ்த தேவாலயத்தில் நடைபெறவிருக்கின்றது.

சுமார் இருபது ஆண்டுகால இடைவெளிக்குப்பின் மேற்படி திருமாவட்ட அவைக்கூட்டங்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கதது.

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் அருட்திரு. நோயல் பொனாண்டோ, வட-கிழக்கு திருமாவட்ட அவைத் தலைவர் அருட்திரு எஸ்.ஜே.கதிரேசபிள்ளை ஆகியோர் தலைமைதாங்கி இந்த அவைக் கூட்டங்களை நடத்தவுள்ளனர்.

வட-கிழக்கைச் சேர்ந்த, பருத்தித்துறை முதல் கோமாரி வரையுள்ள பன்னிரண்டு சேகரங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இத்திருமாவட்ட அவைக்கூட்டங்களில் பங்குபற்றவுள்ளதாக, கல்முனை மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக் குரு அருட்திரு எஸ்.டி.தயாசீலன் தெரிவித்தார்.

மேலும் இந்த நிகழ்வின்போது, நாட்டின் இன்றைய நிலைமைகள் தொடர்பான திருச்சபையின் பங்கு தொடர்பாக ஆராயப்படவிருப்பதுடன்,

"ஆன்மீகப் பிரகாரமாகவும் சமுதாயப் பணியிலும் மீளக் கட்டியெழுப்புதல்" எனும் தலைப்பிலான உரையாடல்களும் இடம்பெறவுள்ளன. (07)

### போயா ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில், நாளை மறுநாள் சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு நகரசங்கீர்த்தனத்துடன் போயாதின நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி, நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.

வைத்திய கலாநிதி உரோ. மகேஸ்வரனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கைதடி முதியோர் இல்ல பொன்விழாவுக்கு ஏற்பாடு

கைதடி அரசாங்க முதியோர் இல்லத்தின் பொன்விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொன்விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாட்டுக்குழுவொன்றை அமைப்பது தொடர்பாக நேற்று முன்தினம் கைதடி வயோதிபர் இல்லத்தில் முன்னோடிக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இக் கூட்டத்தில் பொன் விழாவை விரிவான அடிப்படையில் கொண்டாடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாகவும், ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.


## வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்

பெயர் - இ.சதுஸ்ணவி
முகவரி - 12/1, இந்து மகளிர் வீதி, கந்தர்மடம்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------------
முகவரி :--------------------
பிறந்த ஆண்டு:--------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்


## புத்தூர் - சாவகச்சேரி வீதியில்

# கல்லுடைக்கும் ஆலைத் தூசிகளால் விவசாய நடவடிக்கைகள் பாதிப்பு!

புத்தூர் - சாவகச்சேரி வீதியில், வாதரவத்தைக்கும் புத்தூருக்கும் இடையில் இருபக்கமும் இயங்கி வரும் கல்லுடைக்கும் தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுத் தூசிகளால் - விவசாயிகளும், பயணிகளும் பெரிதும் பாதிப்புக்களைச் சந்தித்து வருகின்றனர்.

தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் தூசிக் கழிவுகள் - மிளகாய்ச் செடி மற்றும் சிறுதானியப் பயிர்களில காற்றுடன் வந்து ஒட்டிக்கொள்வதால் பயிர்கள் பாதிப்படைவதுடன், பூத்துக் காய்க்கும் தன்மையையும் இழந்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுத்து விவசாயிகளின் பயிர்களைப் பாதுகாப்பதுடன் சூழல் மாசடைவதையும் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் விவசாயிகள் கேட்டுள்ளனர். (80)

# சரவணை உவர்நீர் தடுப்பு அணை நியாப் திட்டத்தினால் புனரமைப்பு

(வேலணை)

தீவகத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது, உடைக்கப்பட்ட சரவணை உவர்நீர்த் தடுப்பணைத் துருசுப் பகுதி, நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

சுமார் அரை நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட இத்தடுப்பணையின் திருத்த வேலைகள், நியாப் திட்ட உதவியுடன் அப்பகுதி கமக்காரர அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த அணைக்கட்டு சேதமாக்கப்பட்டமையினால், பெருமளவு விவசாய நிலங்கள் மற்றும் நன்னீர்க் கிணறுகள் என்பன உவராகியுள்ளது குறிப்பிடத்தக்கது. (99)

## புத்தூர் கிழக்குப் பகுதியில்

# தமிழாலயம் சனசமூக நிலையம் படையினரால் மீள ஒப்படைப்பு!

புத்தூர் கிழக்கு, கிராம அலுவலர் பிரிவில் உள்ள தமிழாலயம் சனசமூக நிலையம் மற்றும் முன்பள்ளி, கந்தையா அரங்கம் ஆகியவற்றைப் படையினர் மீண்டும் நிர்வாகத்திடம் ஒப்படைத்தனர்.

நீண்டகாலமாகப் படையினரின் பாவனையில் இருந்த இப் பொதுக் கட்டிடங்கள், நேற்றுக் காலை அச்சுவேலி இராணுவப் பொறுப்பதிகாரியினால் கையளிக்கப்பட்டன.

இதேவேளை - இப்பகுதியில், படையினர் கலாசார மண்டபம் மற்றும் ஏழு வீடுகளிலும் தொடர்ந்து நிலைகொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (110)

# உள்ளூராட்சி வாரவிழா; பருத்தித்துறையில் ஏற்பாடு

(வடமராட்சி)

உள்ளூராட்சி வாரத்தைப் பருத்தித்துறை சனசமூக நிலையங்களின் சமாசத்தின் அனுசரணையுடன் மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதற்குப் பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் ஏ.நடராசா நடவடிக்கை எடுத்துள்ளார்.

விளையாட்டுப்போட்டிகள், சிரமதானங்கள், மரம் நாட்டு விழாக்கள் என்பன நடைபெறவுள்ளன. விளையாட்டு போட்டிகளில் பங்குபற்றும் கழகங்கள், விண்ணப்பங்களைப் பருத்தித்துறை பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (17)

### மந்திகையில் கணினி பயிற்சி மையம் திறப்பு

(வடமராட்சி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் அறங்காவலர்சபையும், இந்து கலாசார அமைச்சும் இணைந்து கணினிப் பூங்காவொன்றை ஆரம்பித்துள்ளது.

மந்திகையிலுள்ள தனியார் வீடொன்றில் இந்தக் கணினிப் பயிற்சி நிலையம் இன்று காலை 9 மணிக்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனால் திறந்து வைக்கப்படும். (17)

# வடமராட்சி கிழக்கு புனரமைப்பில் நிக்கொட், நீப் நிறுவனங்கள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் இடம்பெறும் புனரமைப்பு வேலைகளை நிக்கொட் நிறுவனமும், நீப் நிறுவனமும் தனித்தனியாக மேற்கொள்ளவுள்ளன.

மருதங்கேணி பொதுச்சந்தை, மாமுனை, உடுத்துறை மீன்சந்தைகள், மருதங்கேணி பொது நூலகக் கட்டடப் புனரமைப்பு, நூலகத்தை வளம் படுத்தல், செம்பியன்பற்றிலிருந்து கடற்கரைக்குச் செல்லும் வீதி, மாமுனையிலிருந்து கடற்கரைக்குச் செல்லும் வீதி, மருதங்கேணி - நாவலடி சந்தியிலிருந்து உடுத்துறை மகா வித்தியாலயத்திற்குச் செல்லும் வீதி, வடலியடைப்பு பிள்ளையார் கோவிலிலிருந்து கடற்கரைக்குச் செல்லும் வீதி ஆகியன இந்த அமைப்புகளால் புனரமைக்கப்படவுள்ளன. (17)

# இடம் பெயர்ந்த மக்களுக்காக குடத்தனையில் தற்காலிக வீடுகள்

## யு.என்.எச்.சி.ஆர். அமைக்கும்

வடமராட்சி கிழக்கு- மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவில், குடத்தனைப் பகுதியில் குடியேறியிருக்கும் 38 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகள், கிணறுகள் , மலசல கூடங்களைக் கட்டிக்கொடுக்க யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் முன்வந்துள்ளது.

நாகர்கோவில் - அம்பன் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து குடத்தனைப் பகுதியில் குடியேறியவர்களுக்கே தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. இது தொடர்பாக யு.என்.எச். சி.ஆர். நிறுவன அதிகாரிகள் குடத்தனைக்குச்சென்று கிராம அலுவலர்களுடனும், பயனாளிகளுடனும் கலந்துரையாடிச் சென்றுள்ளனர்.

இத்திட்டத்துக்கமையக் குடத்தனை வடக்கில் 21 வீடுகளும், குடத்தனை தெற்கில் 17 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படும். (17)




மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினால் கால் ஊனமுற்றோருக்கு முச்சக்கர வண்டி வழங்கும் வைபவத்தில் - லயன்ஸ் கழகப் பிரமுகர் முச்சக்கர வண்டியை வழங்கும் காட்சியை படத்தில் காணலாம். (46)

## சின்னஞ்சிறு செய்திகள்

### ஆலயத்துக்கு அடிக்கல்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தீர்த்தக் கடற்கரையில் 15 இலட்சம் ரூபா செலவில் ஆலயமொன்று அமைக்கப்படவுள்ளது.

தீர்த்தக் கடற்கரை கிருஷ்ணன் கோயில் பரிபாலனசபைத் தலைவர் என்.சந்திரசேகரம் தலைமையில், இன்று காலை 11 மணியளவில் நடைபெறும் நிகழ்வில் - இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அடிக்கல்லை நாட்டிவைப்பார். இவ்விழாவில் நிக்கொட் பணிப்பாளர் எஸ்.லங்காநேசன், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய அறங்காவலர்சபைத் தலைவர் எஸ்.அன்னலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர்.

### சமுர்த்தி முகாமையாளருக்கு மகரகமவில் வேலைப் பட்டறை

சமுர்த்தி முகாமையாளர்களுக்கு - சமுர்த்தி அதிகாரசபையின் சந்தைப்படுத்தும் முகாமைத்துவப் பிரிவினால், தொழில்சார் பட்டறை மகரகமவிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை இந்தப் பட்டறை இடம்பெறும்.

இப்பட்டறையில் கலந்து கொள்பவர்கள் - 16 ஆம் திகதி குறித்த பயிற்சி நிலையத்தில் தமது வருகையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டுமுயற்சிக் கடன்களைப் பெற்று சிறு அமைப்புக்கள் முன்னேறலாம்

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

**தொழில் முயற்சியாளர்களுக்கான கடன்திட்டங்கள், வங்கி நடைமுறையில் உள்ள கணக்குகள் மற்றும் வங்கிச் செயற்பாடுகள் பற்றி ~ யாழ்ப்பாணம் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் க.சிவபாதவிருதயர். உதவி பிராந்திய முகாமையாளர் க.ஆனந்தராஜா ஆகியோரை 'நமது ஈழநாடு' தொழில் மலருக்காகச் சந்தித்தபோது....**



பிராந்திய முகாமையாளர் க.சிவபாதவிருதயர்

**மக்கள் வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் புதிய, கவர்ச்சிகரமான வங்கிக்கணக்குகள் பற்றியும், அதன் நடைமுறை பற்றியும்..?**

'எத்தெர இசுர' எனும் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, ஜயஸ்ரீ, ஸ்வர்ண பிரதீப, வனிதா வாசனா, சிறுவர், மாணவர்களுக்கான கணக்குகள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

'ஸ்வர்ண பிரதீப' கணக்கு திடீரெனப் பணத்தட்டுப்பாடு ஏற்படும் வேளையில் பொன்னான ஆறுதலை வழங்குகிறது. வீட்டின் கட்டுமானப்பணி, பிள்ளையின் கல்வி நடவடிக்கைகள், விவசாயத்துக்குத் தேவையான விதைநெல் முதலியவற்றை வாங்கவும், மீன்பிடித்தொழிலுக்கான படகு, வலை மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்யவும் 'ஸ்வர்ண பிரதீப' நகை அடகுச் சேவை உதவுகிறது.

'வனிதா வாசனா' மகளிருக்காக அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கு. 500 ரூபா சிறுதொகையுடன் இந்தக் கணக்கை ஆரம்பிக்கமுடியும். அதன் கவர்ச்சிகரமான வட்டி விகிதம் காலத்துக்காலம் அதிகரித்துவரும். சேமிப்புத் தொகைக்கேற்ப அதிகரிக்கும். திருமணம், வீடு கட்டுதல், வர்த்தக முயற்சிகள் போன்ற சகல தேவைகளுக்கும் வனிதா வாசன மூலம் விசேட கடன் வசதிகளைப் பெறமுடியும்.

'வனிதா வாசனா' கணக்கில் ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களில் குறைந்தபட்சம் 7500 ரூபா இருந்தால் இயல்பாகவே பரிசுப்போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். வைப்பிலிருக்கும் ஒவ்வொரு 7500 ரூபாவுக்கும் வெற்றி வாய்ப்புகள் அதிகரிக்கும்.

**கிராமிய மட்டங்களில் வாழும் மக்கள் இன்னமும் தமது பணத்தைச் சீட்டுப்பிடித்தல், வட்டிக்கு வழங்குதல் போன்ற பாதுகாப்பற்ற முறையில் பணத்தைச் சுழலவிடுகின்றார்கள். அந்தவகையில், கிராமியமட்ட மக்கள்வரை வங்கி நடைமுறைகள் சென்றடையக்கூடிய வகையில் என்னமாதியான சேவைகளை வழங்குகிறீர்கள்?**

கிராமிய மட்டங்களில் இந்த நடைமுறைகள் இருப்பது உண்மைதான். ஆனால், இப்போது நாங்கள் அச்சுவேலி, பருத்தித்துறை, சங்கானை போன்ற பல இடங்களிலும் எமது வங்கிக் கிளைகளை ஆரம்பித்திருப்பதால், கிராமியமட்ட மக்களும் வங்கி வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன. அதன் மூலம் பலர் நன்மையடைந்து கொண்டிருக்கிறார்கள்.

சுயதொழில் முயற்சியாளருக்கான கடன் திட்டத்தின்கீழ் 25 ஆயிரம் ரூபாவிலிருந்து ஒரு இலட்சம் ரூபாவரையான கடனைப் பெற்றுக்கொள்ளலாம். அதன்படி, எமது மக்கள் வங்கிக் கிளைகளினூடாக, சுயதொழில் முயற்சிக்கான கடன்களைப் பெற்றிருக்கிறார்கள்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாகச் சுயதொழில் வாய்ப்புக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு, பொதுமக்கள் பலர் நன்மையடைந்திருப்பதால், அவர்கள் அதன்மூலமாகச் சுயதொழிலை நல்லமுறையில் நடாத்திவருவதுடன், கடனையும் மீளளிப்புச் செய்து வருகிறார்கள்.

**கூட்டுமுயற்சியாளர்களுக்கான கடன் திட்டங்கள் ஏதாவது நடைமுறையில் இருக்கிறதா?**

ஆம். ஐந்து அல்லது ஆறு பேர் கொண்ட குழுவாக, ஒருகுழு இருந்தால், அவர்களில் இரண்டு பேர் எமது வங்கியில் கணக்கு வைத்திருந்தால், கூட்டு முயற்சிக்குக் கடன் பெறலாம் அல்லது ஒரு நிறுவனம், அமைப்பு ஆகியவற்றின் கீழ் இயங்குகின்ற மாதர் சங்கம், மகளிர் அமைப்பு என்பவற்றுக்கு அவர்களின் நிர்வாகத்தினர் கடன்களைப் பெற்றுக் கொடுக்கலாம்.

உதாரணமாக - நீர்வேலியில் இயங்குகின்ற ஒரு மகளிர் அமைப்பு கூட்டுமுயற்சி கடன் பெற்று, அதன்மூலமாக முன்னேறிவருகிறார்கள். அத்துடன், கடன் தொகையின் மாதாந்த மீளளிப்புப் பணத்தையும் ஒழுங்காக வங்கிக்குச் செலுத்துகிறார்கள். அதேபோன்று, கடன்பெறவருகின்ற எந்தொரு அமைப்பாக இருந்தாலும், வங்கி நடைமுறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவார்களாக இருந்தால் அவர்களுக்கும் நாம் கடன்களை வழங்குவோம்.

**இலாபகரமான வாடிக்கையாளர்களைத் தொடர்ந்தும் வைத்திருப்பதற்காக அவர்களுக்கு விசேடமான சலுகைகள் இருக்கிறதா?**

வாடிக்கையாளர்களை இனங்கண்டு வகைப்படுத்திக்கொண்ட பின்னர் - இலாபகரமான வாடிக்கையாளர்களைத் தெரிவு செய்து, அவர்களுடன் தொடர்புகளை உறுதிப்படுத்திக்கொள்கிறோம்.

எப்போதும் வாடிக்கையாளர் எதிர்பார்க்கும் அளவுக்கு மேலானதாகச் சேவைகளை வழங்குகிறோம். அவர்களின் எதிர்காலத் தேவைக்காக உயர்வான கடன்களை வழங்குவதுடன், வட்டி வீதத்திலும் விசேட சலுகை வழங்குகிறோம்.



உதவிப் பிராந்திய முகாமையாளர் க.ஆனந்தராஜா

**மக்கள் வங்கிக் கிளை அமைப்பின் அண்மைக்கால முன்னேற்றங்கள் பற்றி?**

326 கிளைகள், 188 அடகு மற்றும் சேமிப்பு நிலையங்கள் மற்றும் 86 கருமபீட சேவை நிலையங்கள் உள்ளடக்கிய கிளை அமைப்பு மக்கள் வங்கியின் பிரதான சக்தியாக விளங்குகிறது.

இலாபத்தைப் பற்றிக் கவனம் செலுத்தும்போது - எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளையும் கடந்து உன்னதமான முன்னேற்றத்தை அடைவதற்குக் கிளை முகாமையாளர்களினதும், அவர்களின் ஆளணித் தொகுதியினரதும் அர்ப்பணிப்பு, செயற்திறமை என்பன வேண்டப்பட்ட தொன்றாகவே அமைகிறது.

**சந்திப்பு - மயில்வாகனம்**

# இயற்கை முறையில் பூச்சிப்பீடைகளை இலகுவாகக் கட்டுப்படுத்துவது எப்படி?

1972 ஆம் ஆண்டு ஏற்பட்ட பசுமைப் புரட்சி, செயற்கைப் பீடைநாசினி மற்றும் செயற்கைப்பசளை பாவனைக்கு வித்திட்டது. அன்றிலிருந்து இன்றுவரை விவசாயிகள் இப்பீடைநாசினிப் பிரயோகத்தைக் கைவிடாது தொடர்ந்து அதிகமாகவும் பாவித்து வருகிறார்கள். இதன்மூலம் பீடைநாசினி உற்பத்தியில் ஈடுபட்ட பல்தேசியக் கம்பனிகளும், முகவர் நிலையங்களும் இலாபமீட்டியிருந்தாலும், அவற்றின் உபயோகத்தால் விவசாயிகளும் நன்மை அடைந்துள்ளார்கள் என்பது உண்மை.

எனினும், தற்போது முன்னர் பாவித்ததும் தற்போது பாவித்துக் கொண்டிருக்கும் இரசாயனப் பீடைநாசினிகளால் சூழலுக்கும், மனிதனுக்கும் பாரிய அபாயங்கள் ஏற்பட வழிவகுக்கப்பட்டுவிட்டது.

மனிதரைப் பொறுத்தவரையில்- நேரடியாக விவசாயிகள் பீடைநாசினி விசிறுகையிலும், பாவனையாளர்கள் பீடைநாசினி விசிறிய மரக்கறிகளை உட்கொள்வதாலும் நச்சுப் பதார்த்தங்களின அளவு உடலினுள் செறிவடைந்து பல நோய்கள் ஏற்படுகின்றன.

சூழலைப் பொறுத்தவரையிலும் இதன் தாக்கம் தீவிரமானதும், பல பின்விளைவுகளைக் கொண்டதாகவும் உள்ளது. பீடைகளுக்கெதிராக இதனை விசிறும்போது - இவற்றுக்கெதிராக புதிய பீடை இனங்கள் தோன்ற ஆரம்பிக்கின்றன.

இதனால்- பீடைகளைக் கட்டுப்படுத்த முடியாமல் போவதால், இன்னும் இதன் பெருக்கம் அதிகரிக்கிறது. இதன் விளைவு- கூடுதலாகப் பூச்சிநாசினி பாவிக்கவேண்டிய தேவை ஏற்படுகிறது. இதனால் சூழல் மிகவும் பாதிப்புக்குள்ளாகிறது.

இவ்வாறு தொடர்ந்து இப்பீடைநாசினிகளைப் பயன்படுத்தும்போது, பீடையைத் தவிர்ந்த நன்மை பயக்கும் பூச்சிகளும் அழிக்கப்படுகின்றன. இதனால், பீடையற்ற இனங்களும் பீடையாக மாறும் அச்சுறுத்தலேற்படுகிறது. இதைவிட ஆச்சரியமான விடயம் - விசிறுகின்ற பீடைநாசினியின் ஒரு வீதம் மட்டுமே பீடையைக் கட்டுப்படுத்த உதவுகிறது. மீதி 99 வீதமும் சூழலிலேயே தேங்குகிறது. அத்துடன், இவை மீந்து நிற்கும் இயல்பையும் கொண்டவை. இவை சூழல் அலகுகளில் - கிணற்றுநீர், ஆறு, குளம், வளிமண்டலம் ஆகியவற்றை அடைகின்றன.



செயற்கை நாசினிகள்

இதனால், நன்னீர் நிலைகளில் நச்சுத்தன்மை அதிகரிக்கின்றது. இது மனிதனில் பல நோய்களை உருவாக்குவதுடன், பறவைகள், விலங்குகள் என்பவற்றின் இனப்பெருக்கத்தைத் தடைசெய்வதால் சூழலின் சமநிலை பாதிப்புக்குள்ளாகிறது.

எனவே, சூழலைப் பாதிக்காதவாறு பீடைகளைக் கட்டுப்படுத்த முடியுமா என்று பார்ப்போம்.

இதற்குச் சிறந்தவழி தாவரப் பீடைநாசினிகளைப் பாவித்தலாகும்.

இந்த முறைகள் ஒன்றும் புதிதல்ல. ஏற்கனவே பல வருடங்களுக்கு முன்பு பயன்படுத்தப்பட்டது. தற்போது மறைந்துவிட்டது.

தாவரப் பீடைநாசினிகள் எனப்படுபவை- பூச்சி பீடைகள், நோய்களைக் கட்டுப்படுத்தக் கூடிய தாவரப் பிரித்தெடுப்புகளாகும்.

இவை செலவு குறைந்த, ஆபத்துக் குறைநத, இலகுவில் கிடைக்கக்கூடிய, முக்கியமாகச் சூழலுக்கு ஆபத்தற்ற பீடைநாசினிகளாகும். இப்பீடைநாசினிகளுக்கு உதாரணமாக எல்லோருக்கும் அறிமுகமான வேம்பைக் கூறலாம்.

### பயன்படுத்தும் முறை

**வேப்பமிலை**

இரண்டு கிலோ வேப்பமிலையை ஐந்து லீற்றர் நீரில் மூடிய பாத்திரத்திலிட்டு, இலைகள் பொன்னிறமாகும்வரை அவிக்க வேண்டும். பின் 12 மணித்தியாலம் குளிரவிட்டு வடித்தெடுத்துச் சவர்க்காரக் கரைசலில் ஒரு லீற்றர் சேர்த்துப் பயிர்களுக்குத் தெளிக்கவேண்டும்.

**சவர்க்காரக் கரைசல் தயாரித்தல்**

1/4 டம்ளர் சவர்க்காரத் தூள்களை ஒரு லீற்றர் தண்ணீரில் கொதிக்க வைத்துப் பின் 12 மணித்தியாலம் குளிர வைக்கவேண்டும்.

சவர்க்காரக் கரைசலுடன் 1/4 மேசைக் கரண்டி மண்ணெண்ணெய் சேர்ப்பின் அது பூச்சிகொல்லியாகச் செயற்படும்.

**வேப்பம் பருப்பு**

25 கிராம் வேப்பம் பருப்பை இடித்து, ஒரு லீற்றர் தண்ணீரில் 12 மணிநேரம் ஊறவிட்டுக் கசக்கிப் பிழிந்து, வடித்து, சவர்க்காரக் கரைசல் 200 மில்லி சேர்த்துப் பயிர்களுக்குத் தெளித்தல்.

**வேப்பம் எண்ணெய்**

3 மில்லி வேப்பம் எண்ணெயை ஒரு லீற்றர் நீருடன் கலந்து தெளிக்கலாம். முதலில் 3 மில்லி எண்ணெயை 200 மில்லி சவர்க்கார கரைசலுடனும், 200 மில்லி நீருடனும் கலந்து நன்கு அடித்துக் கலக்கியபின், மேலும் 800 மில்லி நீருடன் கலந்து தெளித்தல்.

**நொச்சி இலைச்சாறு**

2 மில்லி நொச்சி இலைச்சாற்றை ஒரு லீற்றர் நீருடன் கலந்து 200 மில்லி சவர்க்காரக கரைசல் சேர்த்துத் தெளிக்க வேணடும்.

மேற்கூறப்பட்ட தாவரப் பீடைநாசினிகளைப் பயிர்நட்டு 10 நாட்களில் இருந்து ஒவ்வொரு கிழமையும் தெளித்து வருதல்வேண்டும். இப்பீடைநாசினிகள் - இலை அரி புழுக்கள், வெட்டுப் புழுக்கள், பச்சை இலைத்தத்தி, அழுகணவன், பனிப்பூச்சி, கபிலத்தத்தி முதலியவற்றைக் கட்டுப்படுத்துகிறது. பூச்சிகளுக்கு வெறுப்பை ஏற்படுத்தி முட்டைப் பெருக்கத்தையும், கூட்டுப்புழு வளர்ச்சி, உருமாற்றம் என்பவற்றையும் கட்டுப்படுத்துகிறது. இதுதவிர, உள்ளிச்சாறும் இலகுவாகத் தயாரிக்கக் கூடிய ஒரு பீடைநாசினியாகும். இதனை இரண்டு முறைகளில் தயாரிக்கலாம்.

**முறை 01**

100 கிராம் உள்ளியை அரைத்து, 1/2 லீற்றர் சுடுநீரில் 12 மணித்தியாலயம் ஊறவிட்டுப் பின்பு கசக்கிப் பிழிந்து வடித்தெடுத்து நான்கு லீற்றர் நீருடன் சேர்த்து தெளிததல் வேண்டும். இது வண்டுகளையும், பனிப்பூச்சி, வெண்டி அந்து, அறக்கொட்டியான் முதலியவற்றைக் கட்டுப்படுத்துகிறது.

**முறை 02**

| | |
|---|---|
| உள்ளி | - 100 கிராம் |
| சவர்க்காரம் | - 10 கிராம் |
| மரக்கறி எண்ணெய் | - 2 தேக்கரண்டி |
| நீர் | - 1/2 லீற்றர் |

சவர்க்காரத்தைச் சீவி, நீரில் கரைக்கவும். உள்ளியை அரைத்துச் சவர்க்காரக் கரைசலில் எண்ணெய்விட்டுக் கலக்கவும். இக்கலவையை ஓர் பாத்திரத்தில் இட்டு 24 மணிநேரம் விடவும். பின் 20 லீற்றர் நீருடன் கலந்து வடித்தெடுத்து விசிறவும்.

இது பற்றீரியா, பூஞ்சணம் ஆகியவற்றினால் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்துவது அவதானிக்கப்பட்டுள்ளது.

தற்போது பயிர் பாதுகாப்பில் இத்தாவரப் பீடைநாசினிப் பிரயோகம் அண்டை நாடுகளிலும், அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் அதிகரித்து வருகிறது. எனவே, நாமும் இனி இச்செயற்கைப் பீடைநாசினிகளைக் கைவிட்டு, தாவரப் பீடைநாசினிகளைப் பயன்படுத்தி எம்மையும், எமது சூழலையும் பாதுகாப்போமாக.

ஆக்கம்:-
**தனுசா துரைசிங்கம்,**
(விவசாய உயிரியல் சிறப்பு) இறுதிவருடம்
விவசாயபீடம், யாழ். பல்கலைக்கழகம்.
தருவது:-
தகவல் தொடர்பு மையம்,
(மாணவர் பகுதி) விவசாயபீடம்.

# தெங்குப் பயிர்ச்செய்கையும் எதிர்கொள்ளப்படும் இடர்களும்

இலங்கையின் வடமாகாணம் ஐந்து நிர்வாக மாவட்டங்களைக் கொண்டதாகும்.



அவையாவன - யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகும். இங்குள்ள மக்கள் பெரும்பான்மையானவர்கள் கிராமப்புறத்தை அண்டியவர்களாகவும், விவசாயத்தை முக்கிய தொழிலாகவும் கொண்டவர்களுமாகவே காணப்படுகின்றனர். வடமாகாணத்தில் காணப்படும் பயிர்களில் முதன்மைப் பயிராகிய நெல்லுக்கு அடுத்த படியாகத் தென்னை காணப்படுகிறது. தென்னை வளத்திலிருந்து மனிதனுக்குக் கிடைக்கும் பலவகைப் பயன்பாடுகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் காணப்படுவதால், மனிதனின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்திருப்பதை முன்வைத்து- தென்னையை 'உயிர்காக்கும் மரம்' (Tree of Life) என அழைக்கிறார்கள். தென்னையின் உற்பத்திப் பொருட்கள் பல, மனிதனின் உணவில் பெரும் பங்களிப்பைச் செய்கின்றது. ஒரு மனிதன் உட்கொள்ளும் உணவின் கலோரிப் பெறுமானத்தின் சுமார் 22 வீதம், தெங்கு உற்பத்திப் பொருட்களில் இருந்து பெறுகின்றான்.

வட மாகாணத்தில் தென்னை பெரும்பான்மையாகக் கடற்கரையோரமாகவும், உள்நாட்டுக் கடலேரியின் (Lagoons) இரு பக்கங்களிலும் நன்றாக வளர்வதுடன், வன்னிப் பெருநிலப்பரப்பில் குளங்களுக்கு அண்மையிலும், குளவாய்க்கால்களுக்கு இருபக்கங்களிலும் திருப்திகரமான அளவிற்கு வளர்ந்து பயன்தருகின்றது.

**தென்னைப் பரம்பல்**

1982 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட விவசாய புள்ளிவிபரத்தின்படி வடமாகாணத்தில் சுமார் 32,325 ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை வளம் காணப்படுகின்றது.

இலங்கையின் முழுத் தென்னைப் பரப்பில் வடமாகாணம் சுமார் 3.12 வீதம் பங்களிப்புச் செய்கின்றது. வடமாகாணத்தின் தென்னைப் பரம்பலை மாவட்ட ரீதியாக அட்டவணையில் பார்க்கலாம்.

1982 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளிவிபரத்தின்படி சுமார் 32,325 ஏக்கரில் தென்னை பயிரிடப்பட்டாலும், அவற்றில் சுமார் 25 வீதமானவை பயன்தராத இளம் கன்றுகளும், முதிர்ந்து சோடையான மரங்களுமாகக் காணப்பட்டன. ஆகவே, ஏனைய 75 வீதமானவையே மகைளுக்குப் பயன் கொடுப்பவையாகும். அதன்படி பயன்தரும் தென்னை அமைந்திருப்பது - விஸ்தீரணமாக சுமார் 24,243 ஏக்கரையும், அங்கு காணப்படும் பயன் தரும் தென்னை மரங்களின் எண்ணிக்கை சுமார் 1,454,625 ஆகவும், எடுத்துக்கொள்ளலாம்.

**தென்னைப் பரம்பலின் புள்ளிவிபரம் மாவட்ட ரீதியாக கீழ்த்தரப்படுகிறது**

| மாவட்டம் | தென்னைவள விஸ்தீரணம் ஏக்கர் | தென்னைகளின் எண்ணிக்கை ஏக்கருக்கு 50 மரங்கள் வீதம் | பயன் தரும் தென்னை மர விஸ்தீரணம் 75 வீதம் ஏக்கர் | பயன் தரும் தென்னை மரங்களின் எண்ணிக்கை 75 வீதம் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 7094 | 425640 | 5320 | 319230 |
| கிளிநொச்சி | 14731 | 883860 | 11048 | 662895 |
| முல்லைத்தீவு | 6000 | 360000 | 4500 | 270000 |
| மன்னார் | 3300 | 193000 | 2475 | 148500 |
| வவுனியா | 1200 | 72000 | 900 | 54000 |
| வடமாகாணம் | 32325 | 1939500 | 24243 | 1454625 |

**வருடாந்த உற்பத்தி**

முன்னை நாள் தென்னை ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றிய கலாநிதி M.de. S.லியனகே அவர்கள, இலங்கையின் தென்னை மரங்களின் தற்போதைய சராசரி தேங்காய் உற்பத்தி ஒரு ஹெக்ரயருக்கு 7,000 தேங்காய்கள் எனப் புள்ளிவிபரம் கொடுத்துள்ளார். அதனபடி ஒரு தென்னை மரத்தில் இருந்து வருடாந்தம் கிடைக்கும் தேங்காய்கள் சுமார் 45 ஆகும்.

மேற்படி புள்ளிவிபரம், ஒரு சாதாரண பராமரிப்பிலுள்ள தென்னந்தோட்டத்தின் குறைந்தபட்ச சராசரி உற்பத்தியாகும். இதன்படி வடமாகாணத்தில் இருந்த சுமார் 1,454,625 பயன்தரும் தென்னை மரங்களில் இருந்தும் சுமார் 65,458,125 தேங்காய்கள் பெறப்பட்டன. அதாவது, அண்ணளவாக 65மி. தேங்காய்கள் வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட்டன.

**வருடாந்த தேங்காய் நுகர்ச்சி**

இச்சந்தர்ப்பத்தில் எமது மக்களின் வருடாந்த தேங்காய் நுகர்ச்சியையும் உற்று நோக்குதல் சாலப்பொருந்தும். தெங்கு ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் புள்ளிவிபரங்களின்படி, இலங்கையில் ஒரு சாதாரண மனிதன் சுமார் 90 தேங்காய்களைக் கறித் தேங்காயாகவும், சுமார் 30 தேங்காய்களிலிருந்து தேங்காய் எண்ணெய் மற்றும் உற்பத்திப்பொருளாகவும் நுகர்கிறார்கள். அதாவது, ஒரு மனிதனின் வருடாந்த நுகர்ச்சிக்காகச் சுமார் 120 தேங்காய்கள் தேவைப் படுகின்றன. வடமாகாணத்தின் சனத்தொகை சுமார் ஒரு மில்லியன் எனக்கொண்டால், எமது வருடாந்த நுகர்ச்சிக்காக 120 மில்லியன் தேங்காய்கள் தேவை. ஆனால், எமது வருடாந்த தேங்காய் உற்பத்தி 65 மில்லியனாக இருந்தபோது, நாங்கள் 54 வதம் தன்னிறைவாகவே காணப்பட்டோம் என்பது அவதானிக்க வேண்டிய ஒரு முக்கியவிடயமாகும்.

ஆகவே 24,243 ஏக்கரிலிருந்து சுமார் 54 வீதம் தன்னிறைவை மட்டும் பெற்றிருந்தோமானால், நாங்கள் 100 வீதம் தன்னிறைவு பெற வேண்டுமானால், மேலும் 20,650 ஏக்கரில் பயன்தரும் தென்னைகள் தேவை. இது போர் அனர்த்தங்கள் இல்லாத ஒரு சாதாரண சூழ்நிலையில் செய்யவேண்டிய அபிவிருத்தி நடவடிக்கையாகும். வருடத்திற்கு 2000 ஏக்கர் என்ற அடிப்படையில் 10 வருடங்களில் புதுநடுகை செய்யப்பட்டிருக்கவேண்டும். போர்ச்சூழல் இதை அனுமதிக்கவில்லை, இதைமீறி நட்டிருந்தாலும் அவையும் அழிந்திருக்கும்.

**தென்னை அழிவு**

கடந்த இரு தசாப்த காலமாக வடமாகாணத்தில் போர்ச் சூழ்நிலை காணப்பட்டதால்- எமது தென்னை வளமும் பலவழிகளில் படிப்படியாக அழிக்கப்பட்டது, இன்னும் சில பகுதிகளில் தற்பொழுதும் அழிந்துகொண்டிருக்கின்றது. தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வில் - கடந்தகாலங்களில் தென்னைவள அழிவுக்கு மக்களால் தெரிவிக்கப்பட்ட காரணங்கள் பின்வருபவையாகக் காணப்படுகின்றது.

1. போர்ச் சூழல்/வன்செயல்.
2. மக்களின் இடப்பெயர்வு.
3. ஷெல்/பல்குழல் தாக்குதல் - வட்டுடன் மரம் முறிந்துவிழல்.
4. இராணுவ நடவடிக்கை -
   - ☞ இராணுவக் காப்பரண்கள் அமைப்பதற்குத் தென்னை மரக்குற்றிகளைத் தறித்துப் பாவித்தல்.
   - ☞ முகாம் மறைவுக்காகப் பச்சைத் தென்னோலை வெட்டுதல்.
   - ☞ முகாம்களுக்கு அருகில் அமைந்துள்ள தோட்டங்களுக்கு மக்களைச் செல்ல விடாமை.
5. தொடர்ச்சியான, ஒழுங்கான, உரிய முறையிலான பராமரிப்பு இன்மையால் மரங்கள் நலிவுற்று சோடையாகி அழிதல்.
6. யானை, காட்டு மிருகங்களால் அழிவு - குறிப்பாக வன்னிப் பெருநிலப் பரப்பு.
7. நோய், பீடைத்தாக்கங்களினால் அழிவு.
8. வறட்சி.

ஓர் அசாதாரண சூழ்நிலையில் காணப்பட்ட மேற்படி காரணிகளால், எமது தென்னைவளம் வருடாவருடம் அழிக்கப்பட்டு வந்ததை யாவரும் அறிவர். இதற்கு ஒரு சான்றாக ஏ-9 பெருவீதியால் பயணம் செய்பவர் இயக்கச்சியில் இருந்து யாழ்ப்பாணம் வரையான பகுதியில் வீதியின்



இருபக்கத்தையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கும். பெருவீதி ஓரங்களைவிட உள்ளூர்ப் பகுதிகளில் ஏற்பட்ட அழிவு, எமது கண்ணுக்கு நாளாந்தம் புலப்படாவிட்டாலும், நாம் மேற்கொண்ட ஆய்வில் தெட்டத் தெளிவாகக் காணப்படுகின்றது.

(தொடரும்...)

சி.சிவச்சந்திரன்,
பிராந்திய முகாமையாளர்,
தெங்குப்பயிர் செய்கைச்சபை -வடக்கு.

# வெங்காயச் செய்கையில் நோய்த்தாக்கம்; கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்!



இம்முறை வெங்காயச் செய்கை யாழ். குடாநாட்டில் அமோகமாக நடைபெற்று வருகிறது. ஏனெனில், ஏ-9 வீதி திறக்கப்பட்டதால் வெங்காயத்திற்கான சந்தை வாய்ப்பு அதிகரித்ததினாலேயே இச்செய்கை அதிகரித்திருக்கிறது.

கூடிய சந்தைவிலையைப் பெறலாம் என்ற நம்பிக்கையில் எமது வேளாண் பெருமக்கள்- பருவத்திலிருந்து விலகி, உரிய பருவத்திற்கு முன்னதாகவே வெங்காயச் செய்கையை ஆரம்பித்துவிட்டார்கள். இச்செயன்முறையானது பல்வேறு விதமான பீடைத் தாக்கத்திற்கும், இயற்கை அழிவுகளுக்கும் வெங்காயச் செய்கை உட்பட காரணமாக இருக்கிறது.

"பருவத்தே பயிர் செய்" என்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஔவை மூதாட்டி கூறியது இப்போது இவ்விஞ்ஞான யுகத்திலும் நிறைந்த கருத்துடையது என்பது வேளாண் பெருமக்கள் நினைவில் வைக்கவேண்டியதாகும்.

இப்பருவத்தில் பல்வேறு வெங்காயப் பயிர்நிலங்களில் ஏற்பட்டுள்ள நோய்த்தாக்கம் பற்றியும், அதனை நிவர்த்தி செய்யும் வழிகள் பற்றியும் கீழே குறிப்பிடுகிறோம்.

மேற்குறித்த தகவல்கள் வெங்காயத்திற்கு மட்டுமன்றி லீக்ஸ் பயிருக்கும் பொருத்தமாக அமையும். இருப்பினும், தற்போது பெரும்பாலான லீக்ஸ் பயிர்நிலங்களில் ஏற்பட்டிருக்கும் தாக்கமானது, பருவநிலை வேறுபாட்டால் ஏற்பட்ட விளைவுகள் என்றே கருதப்படுகிறது. எனவே, இனிவரும் காலங்களில் வேளாண் பெருமக்களே, பருவத்தே பயிர் செய்து பயனடைவீர்களாக.

| நோய்த்தாக்கம் | இனங்காணும் முறை | கட்டுப்படுத்தல் |
|---|---|---|
| விலாங்குப் புழுத் தாக்கம் (Nematode) நிறைவுடலி | குமிழ் மேற்றோல் பகுதி அழுகலடையும். தாள் மஞ்சளாகும் (பழுக்கும்) வேரினளவு குறையும். | 15 நாட்கள் இடை வெளியில் நிறைவுடலி காபோபியூளனை சிபார்சு செய்த அளவில் கட்டுப்படும்வரை விசிறல் (2 தடவை) |
| வெண்தாள் (Alternaria) பங்கசு | தாளின் நுனிகருகி மடியும். தாளின் இடைப் பகுதியில் சதைப் பற்றான ஈரப்பிடிப்பு உருவாகி மடியும். | தாக்கம் கட்டுப்பாட்டை மீறிய நிலையில் 7நாட்கள் இடை வெளியிலும், கட்டுப்பாடுள்ள வேளையில் 10 நாட்கள் இடைவெளியிலும், ஆரம்ப நோய்த்தாக்கம் உள்ள வேளையில் 14 நாட்கள் இடைவெளியிலும், மங்கோசெப் (Dithane M-45) ஐ பரப்புக்கு 3 அவுன்ஸ் என்ற வீத்தில் விசிறல் வேண்டும் |
| இலைக்கோட்டுப் புழு (நிறைவுடலி) | தாளில் வெளிறிய கோடுகள் காணப்படும். | செலிக்குறோனைப் பாவிக்கவும் |
| பனிப்பூச்சி நிறைவுடலி | - | செலிக்குறோனைப் பாவிக்கவும், பனிப்பூச்சியின் தாக்கத்தை தண்ணீர் விசிறிக்குறைக்கலாம் (பனி காலங்களில்) |

ஆக்கம்:- சிறிவாணி சிவநேசன் (விவசாய உயிரியற்சிறப்பு) இறுதிவருடம் , விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.
தருவது:- தகவல் தொடர்பு மையம், (மாணவர் பகுதி) விவசாயபீடம்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

*சிந்தனைக்கு*

துன்பம் உறவரினும் செய்க துணிவு ஆற்றி
இன்பம் பயக்கும் வினை.

*திருக்குறள்.*

# நமது நோக்கு

## ஆதரவு, அமைதி, அடித்தளம்

ரோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில், பெருமளவு நிதியுதவியை வழங்கியிருக்கின்ற சர்வதேச நாடுகளும் நிறுவனங்களும் - அமைதி முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்தியிருக்கின்றன.

அரசாங்கமும் - விடுதலைப் புலிகளும் கலந்து பேசுவதன் மூலமே, வழங்கப்படும் நிதியுதவிகள் சரியான வகையில் பயன்படுத்தப்படும் - நிதியுதவிகள் தமக்குரிய இலக்கைச் சென்றடையும் என்பதை - ரோக்கியோ மாநாட்டின் இறுதிப் பிரகடனத்தில் சர்வதேச நாடுகள் குறிப்பிட்டிருக்கின்றன.

வட - கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு ஏற்றதான நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ள ரோக்கியோப் பிரகடனம்,

- இந்த நிர்வாகக் கட்டமைப்புக்கான இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு அரசாங்கமும் - விடுதலைப் புலிகளும் எடுக்கும் முயற்சிகளுக்கு, தம்மால் இயன்ற - ஒத்துழைப்பையும், ஊக்கத்தையும் சர்வதேசம் தரும் எனவும் நம்பிக்கை தெரிவித்திருக்கிறது.

அதேவேளை - விடுதலைப் புலிகள் ரோக்கியோ மாநாட்டில் பங்கேற்காதபோதிலும், அவர்களுக்கு ரோக்கியோ மாநாட்டின் முடிவுகளை எடுத்துச்சொல்லும் பொறுப்பை ஜப்பான் ஏற்க வேண்டுமென விதந்துரைக்கப்பட்டிருப்பதோடு,

அமைதி முயற்சிகளில் விடுதலைப் புலிகள் காட்டிவரும் பொறுப்புணர்வுக்கும், உதவி வழங்கும் நாடுகள் பாராட்டுத் தெரிவித்திருக்கின்றன.

மாநாட்டின் முடிவில் பேசிய - ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி, விடுதலைப் புலிகள் மாநாட்டில் பங்கேற்காதது குறித்து சந்தேகங்கள் எழுந்தாலும்- மாநாட்டு முடிவில் அவை பெருமளவில் சிதறடிக்கப்பட்டுவிட்டன எனக் கூறியிருக்கிறார்.

இந்த வகையில், சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் நம்பிக்கையும் சமாதானப் பேச்சுக்கள் பெற்றிருக்கும் சூழலில் -

இனி விடுதலைப் புலிகளைப் பேச்சுக்களில் மீண்டும் பங்கேற்க வைப்பதான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடக்கூடிய தற்துணிவு அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்றிருக்கிறது என்றே கூறலாம்.

விடுதலைப் புலிகள் கோரிநிற்கும் அதிகாரம் உள்ள இடைக்கால நிர்வாக அமைப்பை வழங்குவதற்கு - உள்நாட்டிலும், அரசியல் அமைப்பு ரீதியாகவும் தடைகள் உள்ளன எனப் பின்னடித்து வந்த அரசாங்கம், சமாதான முயற்சிகளுக்குக் கிடைத்துள்ள சர்வதேச ஆதரவைக்கொண்டு - நல்லதொரு பதிலை முன்வைக்கக்கூடிய வாய்ப்பை இன்று சம்பாதித்திருக்கிறது.

உண்மையில் - அதளபாதாளத்தில் இருந்த இலங்கையின் பொருளாதாரத்திற்கு மீட்சி தரக்கூடியதான இப்பெருமளவு நிதியுதவி - வெறுமனே அரசாங்கத்திற்கு கிடைத்துவிடவில்லை.

சமாதான முயற்சிகளும், அதில் விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்புடனான பங்கேற்பும்தான் - சர்வதேசம், இந்த நிதயுதவியை வழங்கக்கூடிய சந்தர்ப்பத்தைத் தந்திருந்தது.

கடந்த பல ஆண்டுகளாக தொடர்ச்சியான போரில் ஈடுபட்டு, நாட்டின் அபிவிருத்திக்கான நிதியை யுத்தத்துக்கு செலவிட்டும், அதில் பல கோடி ரூபாக்களைச் சுருட்டியும், இலங்கை அரசியல்வாதிகள் தம்வசம் வைத்திருந்த கெட்ட பெயரும்,

ஊழலும், திறனற்ற அரச இயந்திரமும், எல்லாவற்றுக்கும் மேலாக நாடு முழுவதும் பரந்திருந்த போர்ப்பாதிப்பும், பதற்றமும்-

இலங்கைக்கான உதவிகளைத் தருவதற்கு சர்வதேச சமூகத்திடம் - ஏராளம் தயக்கங்களையும், பின்னடிப்பையும் விதைத்திருந்ததை எவரும் மறுத்துவிடமுடியாது.

ஆனால் - கடந்த ஓராண்டிற்கு முன்னர் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்புடன் முனனெடுக்கப்படும் போர் நிறுத்தமும், அதனால் தோன்றிய அமைதிச் சூழலுமே-

இன்று, முன்னைய நிலைமாறி - இலங்கை அரசாங்கத்திற்கு - பெருமளவில் சர்வதேச நிதியுதவியைப் பெற்றுக் கொடுக்க அடித்தளமாக அமைந்திருக்கின்றன.

இந்த நிலையில் - இலங்கைக்கு கிடைத்துள்ள இந்தளவு நிதியுதவிகளுக்கு விடுதலைப் புலிகள் முக்கிய காரணம் என்பதும் - அவர்களின் அளப்பரிய பங்கேற்புடனான சமாதானச் சூழலே சர்வதேசத்திடம் மீண்டும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பியிருக்கிறது என்பதும் - அரசாங்கத்திற்குப் புரியாததல்ல.

எனவே - நாட்டினை மீண்டும் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதென, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உண்மையாக விரும்புவாராயின் - அவரிடம் இருந்து தெரிவிக்கப்பட வேண்டிய முதல் நன்றி விடுதலைப் புலிகளுக்கானதாகவே உள்ளது.

அதேவேளை - இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானமும் அமைதியும் நிலைபெறும்போதுதான் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிக்கொள்ளும் இலக்குகளும் அவருக்கு கைவரக்கூடியதாகும்.

அதற்காக - அவர் ஆற்றவேண்டியவை இன்னமும் ஏராளம் உள்ளன. துணிவுடனும், நியாயத்துடனும் அவர் செல்லக்கூடிய பாதையைப் பொறுத்தே - அமைதியும் சமாதானமும் இத்தீவில் நிரந்திரமாகக் காலூன்றக்கூடியதாக இருக்கும்.

இந்தவகையில், முதலில் - விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை ஏற்று - உரிய தீர்வுடன் அவர் செயலாற்ற முன்வரும்போதே, சர்வதேசத்தின் நிதியுதவி - இலக்குகளைச் சென்றடைவதும், இலங்கைத்தீவு மீளக் கட்டியெழுப்பப்படுவதும் சாத்தியமாகும்.

சர்வதேசம் வழங்கியிருக்கும் ஆதரவும், அந்த ஆதரவுக்கு அத்திவாரமான அமைதியும், அமைதியை ஏற்படுத்த உறுதி பூண்டிருக்கும் விடுதலைப் புலிகளுக்கான அரசின் நன்றியுணர்வும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஆழப்பதியுமானால் - அவர் கனவு காணும் இலங்கைக்கான முன்னேற்றத்தை நனவாக்கும் வாய்ப்பு அவரிடமே தங்கியுள்ளது என்றே சொல்லலாம்.

# எமது வீரத்தின் பிரதிநிதிகளாகவே விடுதலைப் புலிகளைக் காண்கிறோம்!

## வவுனியா மகளிர் அமைப்புகள் அறிக்கை

(வவுனியா)

எமது வீரத்தின் பிரதிநிதிகளாகவே விடுதலைப் புலிகளைக் காண்கிறோம். அந்த வீரத்தின் பலம்தான் இன்றைய புரிந்துணர்வு உடன்படிக்கை. எங்கள் பிரதிநிதிகளாகவே புலிகள் - உடன்படிக்கையில் கையொப்பமிட்டதுடன், பேச்சுவார்த்தையை இடைநிறுத்தினர் என்பதை அனைவருமே உணர்ந்து கொள்ள வேண்டும் -

என்று வவுனியா மாவட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பெண்கள் அமைப்புக்கள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

1948 ஆம் ஆண்டு அந்நிய ஆதிக்கத்திலிருந்து இலங்கை மீண்ட காலத்திலிருந்து சிங்கள இனவாத ஆட்சியாளர்கள் தமிழினத்தை அடக்கி, ஒடுக்கி, நசுக்குவதற்காகத் தீட்டிய திட்டங்களால் இன்று நாம் நிலம் இழந்து, வீடு இழந்து, உடமைகள் இழந்து, உயிர்களை இழந்து, உறவுகளை இழந்து பத்தடி வாழ்விடத்தில் உழன்று கொண்டு, இன்றைய சமாதான காலத்திலும்கூட சொந்த இடங்களுக்குப்போய் எங்களுடைய வீடுகளில் வாழமுடியாத அவலங்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

அன்றைய தமிழ்த் தலைவர்கள் - தமிழ் மக்களின் பறிக்கப்பட்ட உரிமைகளுக்காகப் பல சாத்வீகப் போராட்டங்களை நடாத்தினர். இப்போராட்டங்கள் யாவும் சிங்கள இனவாதிகளின் ஆயுத அடக்குமுறையால் நசுக்கப்பட்டன.

காலத்திற்குக்காலம் முன்னெடுக்கப்பட்ட சாத்வீகப் போராட்டங்கள் தோற்கடிக்கப்பட்டு, தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டனர். இதனால் போராட்ட வடிவம் மாற்றப்பட்டது. கேட்டுப் பெறமுடியாத உரிமைகளை அடித்துத்தான் பெறவேண்டும் என்பதனால் இளைய தலைமுறையினர் வெஞ்சினம் கொண்டு ஆயுதப் போராட்டத்தில் குதித்தனர்.

தமிழர்களின் பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்பதற்கும், இழந்துபோன எம்மண்ணை மீட்பதற்கும், பண்பாட்டு, விழுமியங்களைக் காப்பதற்குமாகத் தன்னிகரில்லாத் தலைவனின் கீழ் அணி திரண்டனர்.

உரிமைக்காகப் போராட எத்தனித்த எம்மினத்தை எந்தெந்த வடிவிலெல்லாம் அழிக்கமுடியுமோ அந்த வகையிலெல்லாம் எம்மை அழிக்கத் தொடங்கியது இந்தப் பேரினவாத அரசு. தமிழினத்தை விடுதலைப் புலிகளிடம் இருந்து காக்கிறோம் என்று கூறிக்கொண்டு, உலகிற்குக் கண்கட்டுவித்தை காட்டி ஒரு போரை நடாத்தியது.

சமாதானத்திற்கான போர் என்று ஓநாய் அழுகை அழுது கொண்டு, தமிழினத்தின் அடையாளங்களையே அழிக்கின்ற ஒரு போரை முன்னெடுத்தது. போரியல் வாழ்வினால் பல்லாயிரக் கணக்கான தமிழ்ப் பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர். அரச படைகளால் பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டனர். குழந்தைகள் அநாதைகளாக்கப்பட்டனர். மொத்தத்தில் தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டனர்.

இவற்றையெல்லாம் காணப்பொறுக்காத எமது இளையவர்கள், விலை மதிக்கமுடியாத உயிர் விதைகளைக் கொடுத்து அரச படைகளை நிலைகுலையச் செய்த வீரவரலாறுகளை உலகம் அறிந்துகொண்டுள்ளது. எமது வித்தாகிப் போன வீர மறவர்கள் சிந்திய குருதியின் திட்டிலே நின்றுகொண்டுதான் இன்று சிறிலங்கா அரசுடனும், உலக அரங்குடனும் பேச்சுவார்த்தை மேசையில் சமாதானம் பேச எமது பிரதிநிதிகள் சம்மதித்தனர்.

மக்களின் நிம்மதியான வாழ்விற்காகச் சமாதான காலத்திலும் பொறுமை காத்தவர்கள். இன்று மக்கள் மறுவாழ்வு புனரமைக்கப்படாது அலட்சியப்படுத்தப்படும்போது, புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டவை, பேச்சுவார்த்தை மேசையில் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத போது எமது பிரதிநிதித்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையின் இடைநிறுத்தமானது மிகவும் பொருத்தமானது.

இந்த முடிவினை நாம் அனைவரும் வரவேற்கிறோம். எமது சொந்த உணர்வுகளில் கைவைக்க முனைந்த தீயசக்திகளுக்கு நாம் ஒரு விடயத்தை உணர்த்த விரும்புகிறோம். எம்மினத்தின் வீரம் நிறைந்த சுதந்திரமாக வாழ்வு கிடைக்கும் வரை எமது உரிமைகளை எமது தாயகத்தைப் பெறும்வரை தமிழினம் பொங்கிக் கொண்டேயிருக்கும்.

இந்தச் சமாதானக் காலம் யாருக்காக? இந்தக் காலத்தில் நடக்க வேண்டியவை யாவும் நடந்துவிட்டனவா? எமது பாடசாலைகளில் இன்னும் இராணுவம். எமது வீடுகளில், எமது வயல்களில், எமது கோயில்களில் மொத்தத்தில் எமது வாழ்விடங்களில் எல்லாம் இராணுவம் தனது நிலைகளைப் பலப்படுத்தியே வருகிறது.

சமாதான காலத்திலும் எம்வாழ்வு துயரம் நிறைந்தது. வறுமை நிறைந்தது. அழிவுகள் சூழ்ந்தது. மீண்டும் துயர வரலாறுகளையே வடிக்க முற்படும் தீயசக்திகள் நின்று நிதானித்துப் பார்க்கட்டும்.

கடந்த காலங்களில் நடந்த பேச்சுவார்த்தை மூலம் நாம் கற்ற பாடம்தான் இன்று எம்மைப் பலமடையச் செய்துள்ளது. கூர்மையடையச் செய்துள்ளது. நிதானமாகச் செயற்பட வைத்துள்ளது. இதனையே நாம் மீண்டும் மீண்டும் சிறிலங்கா அரசிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் தெளிவாக உணர்த்தி வைக்க விரும்புகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (03)

# வட மத்திய மாகாண சபையின் கூட்டத்தொடர் இழுபறியில்!

வட மத்திய மாகாண சபையில், ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் நிலவும் முரண்பாட்டினால், மாகாண சபையின் கூட்டத்தை நடத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வடமத்திய மாகாண முதலமைசசர் பேர்ட்டி பிறேமலால் திஸநாயக்க, எதிர்க்கட்சி மாகாணசபை உறுப்பினர்களுக்குரிய நிதி ஒதுக்கீடுகளைச் செய்யாமல், தான்தோன்றித்தனமாகச் செயற்படுவதாக ஐ.தே.கட்சியினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் - நேற்றுமுன்தினம் மாகாண சபைக் கூட்டம் கூடுவதாக இருந்தபோதும், சபையில் ஏற்பட்ட குழப்பங்களால் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டது. இவ்வாறு கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டுவது இது ஆறாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

# வர்த்தமானியில் பிரசுரிக்காதது அடிப்படை உரிமை மீறும் செயல்!

## உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொறுப்பேற்பதான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடாமல் தடுத்தது, அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என்று - உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்க அச்சகர் மற்றும் பொறளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர், இந்த அடிப்படை உரிமைமீறல் வழக்கில் பிரதிவர்திகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசாங்க அச்சக ஊழியர் சங்கத்தாலும், வேறு மூவராலும் இந்த அடிப்படை உரிமைமீறல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வர்த்தமானியைப் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்த போது - அங்கு நுழைந்த சிலர், கலகம் செய்ததால் அச்சகத்தை மூடும் தீர்மானம் எடுத்தது அடிப்படை உரிமைகளை மீறும்செயல் என்று இந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# நோர்வே - ஜப்பான் தூதுவர்கள் கலந்துகொண்டு 31 பேருக்கு 'சாம சூரி' விருது வழங்குகின்றனர்!

## யாழ். பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கையில் நிரந்தர சமாதானத்துக்காக உழைத்த 31 பேருக்கு - 'சாம சேவய' என்ற தொண்டர் நிறுவனம் 'சாம சூரி' விருதுகளை வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள இந்த விருது வழங்கும் விழாவில் நோர்வேத் தூதுவர் பிறட்ஸ்கர், ஜப்பானியத் தூதுவர் ஒட்சுகா மற்றும் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் ஆகியோர் தலைமை வகிக்கவுள்ளனர்.

அத்துடன், இந்த விருது வழங்கும் விழாவில் வெளிநாட்டு இராஜதந்திரிகள், அரசியற்பிரமுகர்கள், சமய, சமுகப் பிரமுகர்களும், ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்பகுதி மக்களும் கலந்து கொள்ளவுள்ளதாக 'சாம சேவய' நிறுவனம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9 மணியளவில் நடைபெறவுள்ள இந்த விருது வழங்கும் விழாவில் - கடந்த பத்து வருடங்களாக இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த, வடக்கு - கிழக்கு மற்றும் தென்பகுதி, எல்லைக் கிராமங்களுக்குச் சென்று இனங்களுக்கிடையிலான சமாதான அபிவிருத்திக்காக உழைத்த 31 பிரமுகர்கள் 'சாம சூரி' விருதுகளைப் பெறவுள்ளனர்.

சமயப் பிரமுகர்களில் வண. சியம்பலகஸ்வெவ விமலசார தேரோ, வண. தந்திரிமலை சந்திரரத்ன தேரோ, வண. பத்தேகம சமித்த தேரோ, பேராயர் மேதகு ஒஸ்வால்ட் கோமிஸ ஆண்டகை, கியூடெக் இயக்குநர் வண. ஜோர்ஜ் ஜெயக்குமார் அடிகள், சுவாமிஜி பி.சிவலோகநாதன் ஆகியோருக்கும்,

தொழில்சார் தகைமைக்காக - பேராசிரியர் உபாலி திஸ்ஸ விதாரண, கலாநிதி ஆரியரத்ன, சமாதானத் தூதுவர் கலாநிதி தேசப்பிரிய விஜேதுங்க ஆகியோருக்கும்,

பெண்கள் செயற்பாட்டிற்காக - பத்மா ரணசிங்க, டுல்சி டீ சில்வா, சறோஜா சிவச்சந்திரன், விமலி கருணாரத்ன, நிமல்கா பெர்னாண்டோ ஆகியோருக்கும்,


தமிழ் - முஸ்லிம் சமூகப் பிரமுகர்களில் - யாழ்.மாவட்ட அபிவிருத்தி நலன்புரிச் சங்கத் தலைவர் செல்லப்பா பத்மநாதன், டி.டி.டேவிட், அப்துல்கலாம், தேசிய சமாதானப் பேரவையைச் சேர்ந்த எஸ்.பி.நாதன், சுப்ரமணியதாஸ், ஜோர்ஜ் பீற்றர் கெசியஸ் ஹஸ்ட், அல்ஹாஜ் மாதர் சாய்பூ, அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையத் தலைவர் சு.பரமநாதன் ஆகியோருக்கும்,

சிங்கள சமூகப் பிரமுகர்கள் - ஜெயதிலக பண்டார, ஈ.பி. நாணயக்கார, மில்டன் அன்ரனி பெரேரா, விமலரத்ன, வி.எல். பெரேரா, ஜெயசிங்க பாலசூரிய, சந்திரரத்ன பண்டார, லக்ஷ்மன் ஜெகத், எஸ்.டயஸ் ஆகியோருக்கும் -

'சாம சூரி' விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

# புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னரும் போர்க்கால நெருக்கடிக்குள் மீனவர்கள்

தமிழ் மக்களிடம் இயல்பு வாழ்வு ஏற்படவேண்டும் என்பதில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு துளியளவும் விருப்பமில்லை என்பதை அவரது கட்டளையின் கீழ் இயங்கும் ஆயுதப் படைகளின் நடத்தைகள் காட்டுகின்றன. குறிப்பாக மீன்பிடியில்



படையினரின் அச்சுறுத்தல்கள் வலுவாகத் தொடர்கின்றன. புரிந்துணர்வு உடன்பாட்டுச் சரத்துக்களுக்கு அமைய மீனவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட கெடுபிடியில் எதுவித இயல்புநிலை ஏற்படுத்தலும் நடைபெறவில்லை. மீன்பிடித்தொழில் முதன்மையாக உள்ள யாழ்பாணக் குடாநாட்டில் இது பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

குடாநாட்டின் சகல கடற்கரைகளும் முட்கம்பி வேலிகளால் தொடர்ந்து அடைக்கப்பட்டநிலையில் உள்ளன. படையினர் இந்த வேலிகளில் அமைத்துள்ள படலைகளால்தான் மீனவர்கள் கடற்கரையுள் நுழையவேண்டியநிலை இன்றும் தொடர்கின்றது. அதிலும் மீனவர்கள் பாஸ் காட்டியே தொழிலில் இறங்கவேண்டும் என்ற போர்க்காலக் கெடுபிடியில் எதுவித மாற்றமும் இல்லை. மீனவர்களுக்கு நேரவரையறை தொடர்கின்றது. எல்லை வரையறையில் மட்டும் சில மாற்றங்கள்-வேறெந்த மாற்றமும், மீன்பிடியில் படையினரால் ஏற்படுத்தப்படவில்லை.

இந்தக் கட்டுப்பாடுகளுக்கும் மத்தியில் கடலில் கடற்படையினர்-மீனவர்களைத் தாககுவது மறுபுறம் நடக்கின்றது. மீனவர்களின் படகுகள கடற்படைப் படகுகளால் பல தடவைகள் மோதிச் சேதமாக்கப்பட்டுள்ளன, மூழ்கடிக்கப்பட்டுள்ளன, மீனவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள், அவர்களின் வலைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. இலங்கைத் தீவிலே கடல்வளம் மிக அதிகமாகவுள்ள யாழ்ப்பாணக் கடலிலே மீனவர்கள் சுயாதீனமாக மீன்பிடிப்பதற்கு நாளாந்தம் படையினர் கெடுபிடிகளைப் பிரயோகிக்கின்றனர். 1983 இல் இலங்கையில் ஆகக்கூடுதலாக யாழ்ப்பாணத்திலேயே கடலுணவு பிடிக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, மிகக்குறைந்த வீதமே தற்போது பிடிக்கப்படுவதாக, யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் சி.தவரட்ணம் கூறுகின்றார்.

மீன்பிடியில் நெருக்கடிகள் கொடுக்கப்படும் அதேவேளை, மீன் பாதுகாப்பில் பக்கபலமாகவுள்ள பனிக்கட்டி உற்பத்திக்கான குருநகர் ஆலையும் படையினர் வசம் உள்ளது. அதனை விட்டுவிலக படையினர் மறுக்கின்றனர்.

இலங்கைத்தீவில் கடலுணவு உற்பத்தியில் ஆகக்கூடுதலாக 80 வீதம் 1961 இல் நடந்தது. 80 களின் நடுப்பகுதியில் எமது மீனவர்களுக்கே மீனுக்குப் பஞ்சம் என்னும் நிலையைப் படையினர் ஏற்படுத்தியுள்ளதாக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளராகவுள்ள கடலகவள ஆய்வுத்துறை நிபுணர் கலாநிதி சூசை ஆனந்தன் கூறுகிறார்.

1983 இல் யாழ்ப்பாணத்தில் கடலுணவு உற்பத்தியில் 48 ஆயிரம் மெற்றிக்தொன்களாக இருந்தது. புரிந்துணர்வு உடன்பாட்டின் முன் 2000 மெற்றிக்தொன்னாக அது இருந்தது. இப்பொழுது 5000 மெற்றிக்தொன் அளவு மட்டுமே, கடலுணவு உற்பத்தி யாழ்ப்பாணத்தில் கூடியிருக்கிறது. 1983 அளவின் ஒன்பதின் ஒரு பங்காகவே இன்றைய கடலுணவு உற்பத்தி குடாநாட்டில் இருக்கிறது.

படையினர் நாளாந்தம் மீனவர்கள் மீது கெடுபிடிகளை மீளவும் ஒரு சிறுதளர்வின் பின் அதிகமாக்குகின்றமை 5000 மெற்றிக் தொன்னைக்கூட மீண்டும் வீழ்ச்சியுறவைக்கும். படையினரின் கெடுபிடி ஒருபுற மிருக்க, இந்தியமீனவர்களின் இழுவைப்படகுகள் தாயகக் கடல் எல்லையுள் நுழைந்து, தாயகக் கடற்பகுதிக்கே உரிய தனித்துவ பவள உயிரினஙகளையும், கடல் வளத்தையும் அழித்துச செல்கின்றமை, உள்ளூர் மீனவர்களின் வலைகளை அழிக்கின்றமை என்ற அட்டூழியம் மறுபுறம் நடக்கினறது.

இந்திய மீனவர்களைத் தடுப்பதில் எதுவித அக்கறையையும் படைகள் காட்டவில்லை. அத்துமீறிய தமிழக மீனவர்களுக்கும் - தாயகமீனவர்களுக்கும் இடையே மோதல்கள் நிகழத்தொடங்கிவிட்டன. புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு முரணாக, கடலில் மீனவர்கள் இயல்புநிலையை ஏற்படுத்துவதில் படையினர் தொடர்ந்தும் பின்னடித்து வருகின்றனர்.

இதனால், குடாநாட்டில் கடலுணவு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதோடு மட்டுமல்லாது, மீனவர்களின் வாழ்வில் எதுவித முனனேற்றமும் இல்லாதுள்ளது. குடாநாட்டிலுள்ள 579 கிலோமீற்றர் நீளக் கடற்பகுதியில் - 3360 சதுரகிலோ மீற்றர் பரப்புக்கொண்ட கடல்வள கண்டமேடையில் இன்று எத்தனை வீதம் பயன்பாட்டில் உள்ளது என்பது கேள்வி. 1983 இல் 24,839 மீன் பிடித்தொழிலாளர்கள் குடாநாட்டில் இருந்தனர். இன்று 11,375 குடும்பங்களைச் சேர்ந்தோர் மட்டும் தொழிலில் ஈடுபடக்கூடியதாக உள்ளது.

குடாநாட்டில் இருந்த ஒரேயொரு முதன்மை மீன்பிடித்துறைமுகமான மயிலிட்டி - உயர்பாதுகாப்பு வலயத்தில் முடக்கப்பட்டுவிட்டது. தமிழர் தாயகத்தில் 1983 இல் யாழ்ப்பாணத்தில் 49,725 தொன் கடலுணவும், மன்னாரில் 19,012 மெற்றிக் தொன்னும் ,திருகோணமலையில் 13,506 மெற்றிக்தொன்னும், முல்லைத்தீவில் 6,968 மெற்றிக்தொன்னும், மட்டக்களப்பில் 4,460 மெற்றிக்தொன்னும், அம்பாறையில் 10,655 மெற்றிக் தொன்னும் பிடிக்கப்பட்டன. மொத்தம் 1,04,326 மெற்றிக்தொன் கடலுணவு அந்த ஆண்டு தமிழர்தாயகக் கடற்பரப்பில் பிடிக்கப்பட்டன. அதேயாண்டு சிங்களப் பகுதிகளில் 79,700 மெற்றிக்தொன் கடலுணவே பிடிக்கப்பட்டது.

**ரி.தவபாலன்**

இத்தனைக்கும் தமிழர் தாயகப்பகுதியில் 3 மீன்பிடித்துறைகள் (யாழ்-மயிலிட்டி, திருகோணமலை, மட்டக்களப்பு) மட்டுமே இருந்தன. ஏனைய பகுதிகளில் 5 மீன்பிடித்துறைகள் இருந்தன. தவிர, இன்று 62 மீன்பிடித் துறையடிகள் (point) உள்ளன.

குடாநாட்டில் இருந்த ஒரேயொரு மண்பிடித்துறையும் - படை உயர்பாதுகாப்புவலயத்தில் முடங்கிப்போயிருக்க, ஏனைய கடற்கரைப்பகுதிகளும் இராணுவ வேலிகளால் அடைக்கப்பட்டிருக்கின்றன. குடாநாட்டிலுள்ள 11 முக்கிய மீன்பிடித்துறையடிகளிலும் இராணுவத்தினரின் அனுமதி அட்டைகளைக் காட்டி துறையடிகளில் மட்டும் அமைக்கப்பட்டுள்ள வேலிகளால் மட்டும் மீனவர்கள் கடலுள் இறங்க வேண்டிய பரிதாப நிலையில் உள்ளனர்.

புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்தாகி ஒன்றரை ஆண்டுகளான பின்னரும் இந்தப் போர்க்கால கெடுபிடிகளுக்கு மத்தியில் யாழ்ப்பாண மீனவர்கள் வாழ்ந்துவருகின்றனர்.

---

# சிறந்த விவசாயிகள் தெரிவுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளின் தொழில்நுட்ப அறிவையும், திறனையும் விருத்திசெய்யும் நோக்கில் - யாழ்.மாவட்ட விவசாயத்திணைக்களம் கடந்த மூன்று வருடங்களாக ஒவ்வோர் பிரதேசத்திலும் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளில் சிறந்தவர்களைத் தெரிவுசெய்து கௌரவித்து வந்துள்ளது.

இந்த ஆண்டிலும் கடந்த காலங்களைப் போலவே ஒவ்வோர் விவசாயப் போதனாசிரியர் பிரிவிலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்வுள்ளது.

இதன்மூலம் சிறந்த விவசாயிகள் தெரிவு செய்யப்படுவதுடன், உற்பத்தியை அதிகரிப்பதில் பொருத்தமான தொழில்நுட்ப பாவனை ஊக்குவிக்கப்படுதல், விவசாயிகள் தங்கள் முயற்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு, உற்பத்தியில் முன்னோக்கிச்செல்லும் வாய்ப்பு ஆகிய நன்மைகள் ஏற்படும் என யாழ். உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை அறிவித்துள்ளார்.

போட்டியில் பங்குபற்றுவோர் கடந்தகாலங்களில் சிறந்த விவசாயிகளுக்கான போட்டியில் பங்குபற்றி, பரிசில் பெறாதவராகவும் இருக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பங்குபற்றவுள்ளோர், தங்களுக்கான விண்ணப்பப் படிவங்களை அவ்வப்பகுதி விவசாயப் போதனாசிரியர் அலுவலகங்களில் பெற்றுப் பூர்த்திசெய்து, எதிர்வரும் ஜுலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன் விவசாயப் போதனாசிரியர்களிடம் ஒப்படைக்கும்படியும்,

இவ்விடயம் சம்பந்தமான பூரண விபரங்களை விவசாயப் போதனாசிரியர் அலுவலகங்களில் பார்வையிட முடியும் எனவும் உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## தேர்த்திருவிழா

கொழும்புத்துறை மேற்கு இலந்தைக்குளம் விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளையும், தீர்த்தத் திருவிழா நாளை மறுநாளும் மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலனசபை தெரிவித்துள்ளது.

## உதைபந்தாட்டப் போட்டி

(நவிண்டில்)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்டு வரும் ஒன்பது பேர்கொண்ட விலகல்முறை உதைபந்தாட்டப் போட்டியில் இன்று -

பிற்பகல் 3.30 மணிக்கு வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்துக்கு அருகிலுள்ள நியூட்டன் விளையாட்டுக்கழக மைதானத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்துக் கலைவாணி விளையாட்டுக்கழகமும்,

பிற்பகல் 4.30 மணிக்கு நியூட்டன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து - அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (116)

# அம்பன் பாடசாலையில் மீண்டும் உயர்தர வகுப்பு!

(நெல்லியடி)

வடமராட்சி கிழக்கு - அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில், கடந்த 7 வருடங்களின் பின்னர் மீண்டும் க.பொ.த உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து வடமராட்சி கிழக்கில் இருந்த பல பாடசாலைகள் இயங்காமல் இருந்து, மண்டும் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் இங்கு உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவில்லை.

தற்பொழுது வடமராட்சி கிழக்கில் இப்பாடசாலையில் மட்டுமே உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு, கலைப்பிரிவில் பதினெட்டு மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். (13)

# யாழ்தேவி இரவு ரயிலில் அவதானமாக இருங்கள்!

## ரயில் நிலைய அதிபர் அறிவிப்பு

(வண்ணை)

வவுனியாவிலிருந்து இரவு பத்து மணிக்குக் கொழும்பு கோட்டை நோக்கிப் புறப்படும் யாழ்தேவி ரயிலில் பயணிப்போர், அறிமுகமில்லாதோரிடம் எந்த உணவுப் பொருளையும் வாங்கி உண்ணவோ, குடிக்கவோ வேண்டாம் எனவும், தமது உடைமைகளில் கூடியகவனம் செலுத்துமாறும் வவுனியா ரயில் நிலைய அதிபர் - பயணிகளுக்கு விசேட அறிவிப்பை விடுத்துள்ளார்.

கடந்தவாரம் கிளிநொச்சியைச் சேர்ந்த பயணி ஒருவருக்கு அருகிலிருந்தவரால் இளநீர் வழங்கப்பட்டதாகவும், அதனை அருந்தியவர் சிறிது நேரத்தில் மயக்கமுறவே அவரிடமிருந்த ஒரு லட்சம் ரூபா பணம் மற்றும் நகைகள் திருடப்பட்ட சம்பவத்தையடுத்தே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (111)

# முத்திரைச்சந்திப் படுகொலை வழக்கு; குற்றஞ்சாட்டப்பட்டவர் விளக்கமறியலில்!

அண்மையில் முத்திரைச் சந்தைப் பகுதியில் சகோதரனை அலவாங்கால் அடித்துக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நபரை எதிர்வரும் இருபத்துமூன்றாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.மாவட்ட நீதிபதி விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, நல்லூரைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை முரளிதரன் என்பவர், கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது சகோதரனை அலவாங்கால் தாக்கிக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

இவரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்துமாறு யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு - யாழ்.நீதிவான் சமபவம் இடம்பெற்ற அன்று உத்தரவிட்டிருந்தார்.

நதிபதியின் உத்தரவின்படி யாழ்ப்பாணப் பொலிஸார் - கொலையுடன் சம்பந்தப்பட்ட கிருஷ்ணபிள்ளை முரளிதரன் என்பவரைக் கைதுசெய்து, நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

## வன்னிப் பிரதேசத்தில்

# ஜப்பானிய நிறுவனத்தால் பாடசாலைகள் புனரமைப்பு

(ஆழியவளை)

ஜப்பானியத் தொண்டு நிறுவனம் முதல் தடவையாக வன்னிப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளைப் புனரமைக்க முன்வந்துள்ளது.

ஆசியாவுக்கான ஜப்பானின் பாலம் என்ற நிறுவனம் **(B.A.J.)** தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடனும், பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்துடனும் இணைந்து - பளைப்பிரதேசத்தில் உள்ள இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, சோரன்பற்று கணேசா வித்தியாலயம், தர்மங்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என்பவற்றைப் புனரமைப்பதுடன், மலசல கூடங்கள், கிணறுகள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளது. (122)

# வடமராட்சி வலயத்தில் ஆங்கில தினப் போட்டிகள்

(ஆழியவளை)

வடமராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் ஆங்கில தினப்போட்டிகளை நடாத்துவதற்குரிய ஒழுங்குகளை வடமராட்சி வலயக் கல்வித்திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

பாடசாலைமட்டப் போட்டிகள் இந்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னரும், கோட்டமட்டப் போட்டிகள் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னரும், வலயமட்டப் போட்டிகள் அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னரும் மாவட்ட மட்டப் போட்டிகள் அடுத்தமாதம் 20 ஆம் திகதிக்கு முன்னரும், மாகாண மட்டப் போட்டிகள் செப்ரெம்பர் 20, 27 ஆகிய திகதிகளிலும் நடைபெறும் என வடமராட்சி வலய ஆங்கில உதவிக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (122)



இஸ்ரேல் ஹெலித் தாக்குதலில் காயமடைந்த ஹமாஸ் இயக்கத் தலைவர் அப்துல் அசீஸ் அல் - ரன்ரிசி, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

# இஸ்ரேல் ஹெலித் தாக்குதலில் மூன்று பலஸ்தீனியர்கள் பலி!

(டெல் அவிவ்)

காஸா பகுதியில் - இஸ்ரேலிய ஹெலிகொப்ரர்கள் நேற்றுமுன்தினம் இரண்டு தடவைகள், பெரும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

முதல் தாக்குதல் - 'ஹமாஸ்' இயக்கத் தலைவர் அப்துல் - அசீஸ் - ரன்ரிசி பயணம் செய்த கார் மீது நடத்தப்பட்டது.

இதில் - ரன்ரிசி சிறுகாயங்களுடன் உயிர்தப்பிக் கொண்டார். இத்தாக்குதல், பலஸ்தீனர்களிடையே பெரும் கோபத்தையும் எதிர்ப்பையும் கிளப்பியிருந்தது.

இதேவேளை - இத்தாக்குதல் நடந்து சில மணி நேரங்களில், மற்றுமொரு ஹெலித் தாக்குதலை - இஸ்ரேல், காஸாப் பகுதியிலே நடத்தியது. இதில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர், 30 பேர் வரை படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதல்களை - அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் - 'சிக்கலில் ஆழ்த்தும்' தாக்குதல்கள் என வர்ணித்ததோடு, ஹமாஸ் இயக்கத்தலைவர் மீதான தாக்குதல் பற்றித் தனது எதிர்ப்பையும் தெரிவித்தார்.

இத்தாக்குதல்கள் - தனது புதிய சமாதானத் திட்டத்தை ஆதரிக்கும் பலஸ்தீனப் பிரதமருக்கு நெருக்கடிகளைத் தருமெனவும் - இத்தாக்குதல்கள் இஸ்ரேலின் பாதுகாப்புக்கு உதவும் என ஒருபோதும் நம்பவில்லை எனவும் புஷ் மேலும் கூறினார்.



இதேவேளை - ரன்ரிசி மீதான தாக்குதல் நடத்தப்பட்டபோது - அவர் காரிலிருந்து இறங்கி சில செக்கன்களேயானதால் உயிர்பிழைக்க முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாபதிதியின் புதிய சமாதானத் திட்டத்தையும், இஸ்ரேலுடன் இணங்கிப்போகும் புதிய பலஸ்தீனப் பிரதமரையும் ஹமாஸ் கடுமையாகச் சாடி வருவது தெரிந்ததே.

## பெருவில் கடத்தப்பட்டோர் பாதுகாப்பாக மீட்பு!

பெரு நாட்டிலுள்ள அந்தீஸ் மலைப்பகுதியில் வைத்துக் கடத்தப்பட்ட 60 பேர் விடுவிக்கப்பட்டுவிட்டனர்.

இவர்கள் - கடத்தப்பட்டு 36 மணிநேரங்களின் பின்னர், உயிருடன் மீட்கப்பட்டதாக - பெரு ஜனாதிபதி கூறியுள்ளார்.

கடத்தப்பட்டவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள பகுதியை - பெரு நாட்டின் படைகள் அணுகியதும், கடத்தல்காரர்கள் அங்கிருந்து தப்பி, காடுகளுக்குள் ஒளிந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

இக்கடத்தலை - பெருவின் மார்க்ஸிய போராளிகளான 'பிரகாசமான பாதை' (Shining Path) அமைப்பைச் சேர்ந்தவர்களே கடத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டாலும், அது உறுதிசெய்யப்படவில்லை.


உலகவலம்

## பக்தாத்தில் ஆர்.பி.ஜி. தாக்குதல்; அமெரிக்க பாதுகாப்பு வீரர் பலி!

ஈராக் தலைநகர் பக்தாத்தில், ஆர்.பி.ஜி. ரக ரொக்கட்டால் நடத்தப்பட்ட தாக்குதலொன்றில், அமெரிக்கப் பாதுகாப்புப் படைவீரர் ஒருவர் பலியானார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர், தனக்கு மருத்துவ உதவி அளிக்குமாறு கூறியவாறு, சோதனை நிலையமொன்றை நெருங்கிய ஈராக்கியர் ஒருவரால் - அமெரிக்கச் சிப்பாய் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந்தச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

நேற்றைய சம்பவத்தில் வானொன்றில் வந்தவர்களைச் சோதனையிட அமெரிக்கப் படையினர் முயன்றபோது - வானிலிருந்து இறங்கிய இருவர் - திடீரென ஆர்.பி.ஜியை வானிலிருந்து எடுத்துத் தாக்கியதாகக் கூறப்படுகின்றது.



பக்தாத்திலும், சிரிய எல்லைப் பகுதிகளிலும் இவ்வாறு தொடர் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கடந்த மே முதலாம் திகதிக்குப் பின்னர் - இதுவரை 30 அமெரிக்கப் படையினர் இவ்விதமான தாக்குதல்களில் பலியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. இம்மாதத்தில், எல்லாமாக 85 திடீர் தாக்குதல்கள் அமெரிக்கப் படையினர் மீது இவ்விதம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

## 'கறுப்புப் பூனை' படையில் பெண்களும் இணைப்பு!

### ஜெயலலிதாவுக்கும் இனி இவர்களே காவல்



(சென்னை)

இந்தியாவில் முதற்தடவையாக, மிகமுக்கிய பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கான 'கறுப்புப் பூனை' படையில் - பெண்களும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களில் - 151 பேரைக் கொண்ட முதற் தொகுதியினர் தமது மூன்று மாதகாலப் பயிற்சியை முடித்துக்கொண்டுள்ளனர்.

சென்னையில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கவுள்ள இவர்களுக்கு - துப்பாக்கி சுடுதல், ஆயுதங்களைக் கையாளுதல், நீச்சல், மலையேறுதல், குதிரையேற்றம், ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சியில் மிக முக்கியமானது, சென்னையிலிருந்து - தென் தமிழகத்தின் குமரிமுனைப் பகுதிக்கான 700 கிலோ மீற்றர்களை, இந்த 151 பேரும் அஞ்சலோட்ட முறையில் கடந்ததுதான் என்கிறார் இந்தப் படைக்குப் பொறுப்பான கே.இராஜேந்திரன்.

இவர்கள் - மிக விரைவில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குப் பாதுகாப்பு வழங்கிவரும் 'கறுப்புப் பூனை' படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் கூறப்படுகிறது.

## ஆட்சியாளருக்கு எதிராக ஈரானில் ஆர்ப்பாட்டம்!

ஈரான் தலைநகர் தெஹ்ரானில், அரசுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றில், ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

ஈரானிலுள்ள பல்கலைக்கழகங்களைத் தனியார் மயப்படுத்தப் போவதாக - அரசாங்கம் எடுத்த முடிவுக்கு, எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் - ஆட்சியிலுள்ள இஸ்லாமிய மதவாதிகளுக்கு எதிராகக் கோஷமும் எழுப்பப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தைப் பொலிஸார் கலைத்ததுடன், தடியடிப் பிரயோகமும் செய்தனர்.

இதேவேளை - ஈரானிய ஜனாதிபதி முஹமட் கத்தாமி அறிவித்ததன் படியான மறுசீரமைப்புக்கள் - இன்னமும் மேற்கொள்ளாமல் மிகத்தாமதமாகியது, மக்களிடையே எரிச்சலை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.


யாழ் நகரில் SPOT ADMISSION!!!

திகதி: 14 ஆம், 15 ஆம் திகதி ஜூன் மாதம் 2003

இந்தியாவில் கல்வி பயிலுங்கள்

பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட கார்டன் சிட்டி கல்லூரி

கார்டன் சிட்டி கல்லூரியின் அனுமதி பெற்ற இலங்கையின் ஒரே இணைப்பாளர் திருமதி நளினி சிவகுமாரன்

2003 ஆண்டு அனுமதி

| பாடநெறி | | காலம் |
|---|---|---|
| B.Sc Computer Science | B.Sc.(Comp) | 3 வருடம் |
| Bachelor of Computer Application | B.C.A. | 3 வருடம் |
| B.Com Computers | B.Com.(Comp) | 3 வருடம் |
| Bachelor of Business Management | B.B.M. | 3 வருடம் |
| Bachelor of Hotel Management | B.H.M. | 4 வருடம் |
| B.A Journalism | B.A.(Jour) | 3 வருடம் |
| B.Sc. Fashion & Apparel Design | B.Sc.(F.A.D) | 3 வருடம் |
| B.Sc. Microbiology | B.Sc.(Micro) | 3 வருடம் |
| B.Sc. Genetics | B.Sc.(Gen) | 3 வருடம் |
| B.Sc. Biotechnology | B.Sc.(Biotech) | 3 வருடம் |
| Master of Business Administration | M.B.A. | 2 வருடம் |
| Master of Turism Administration | M.T.A. | 2 வருடம் |
| Master of Social Work | M.S.W. | 2 வருடம் |
| Master of Computer Application | M.C.A. | 3 வருடம் |
| M.Sc. Microbiology | M.Sc.(Micro) | 2 வருடம் |
| Master of Physiotherapy | M.P.T. | 2 வருடம் |
| M.Sc. Biochemistry | M.Sc.(Biochem) | 2 வருடம் |
| M.Sc. Bio.Technology | M.Sc.(Biotech) | 2 வருடம் |

அனுமதிக்கு தேவை:- க.பொ.த. (சா.த) சான்றிதழ், க.பொ.த (உ.த) சான்றிதழ்
பாடசாலை மாணவர் தேர்ச்சி அறிக்கை (கடைசித்தவணை)
தேசிய அடையாள அட்டை - போட்டோப்பிரதி
கடவுச்சீட்டு நிழல் படம் - 4, முத்திரை அளவு நிழல்படம் - 4

பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருக்கும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் 100 டொலர்களை அல்லது 10,000/= ரூபாவை பதிவுக்கட்டணமாக செலுத்தி தற்காலிகமாக பதிவு செய்து கொள்ளலாம். பரீட்சைப் பெறுபேறுகள் போதாத நிலையில் பதிவு வைக்கப்பட்ட பணம் முழுவதும் மீளளிப்பு செய்யப்படும்.

உங்கள் அனுமதிகளை முன்கூட்டியே பதிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்.

திருமதி நளினி சிவகுமாரன்

இடம் : 393/48, கோயில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்

தொலைபேசி : 365360, 503138, 0777-383846

(சி-1078)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தாக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கப் பரிந்துரை!

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலத்தில் படையினரால் தாக்கப்பட்ட, வட - கிழக்கைச் சேர்ந்த பத்திரிகையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறு - வடகிழக்கு பகுதி ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய அமைக்கப்பட்ட குழு பரிந்துரை செய்துள்ளது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கென, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒலிவர் வீரசேன தலைமையிலான விசாரணைக்குழு, அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டது.

இந்த விசாரணைக்குழுவினர், அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்து சம்பந்தப்பட்ட பத்திரிகையாளரிடமும், இராணுவத்தினருடமும், பொலிசாரிடமும் தமது விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்த விசாரணைக்குழுவின் அறிக்கையிலேயே, பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறும், பத்திரிகையாளர்கள மீதான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும், அவர்கள் தகவல் சேகரிப்பதற்கான சுதந்திரத்தை வழங்கும்படியும் பரிந்துரை செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

### இராணுவ...

பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாது வகுப்புக்களைப் பகிஷ்கரிக்குமாறும், வர்த்தகர்கள் வர்த்தக நிலையங்களை மூடியும் மற்றும் போக்குவரத்துக்களை நிறுத்தியும் - எதிர்ப்பைத் தெரிவிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதேவேளை - விடுதலைப் புலிகளின் புளியந்தீவுக் கோட்டப் பொறுப்பாளர் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து, கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (107)

# சிறுமிகள் மீது பாலியல்...

மன்றிற்குச்செய்த முறைப்பாட்டின் நிமித்தம், யாழ்.மாவட்ட நீதிபதி விக்னராஜா - கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் இவ்விடயம் தொடர்பாக, விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து - கோப்பாய் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி, உரும்பிராய் வடக்கு - கற்பகப்பிள்ளையார் கோயில் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீவசந்தா நாகபூஷணி அம்மன் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் மேற்கொண்ட விசாரணைகளின்படி - அச்சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் இருந்த 16 வயதிற்குட்பட்ட இரு சிறுமிகள், பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டிருந்தது தெரியவந்தது.

இச்சிறுமிகள் இருவரினதும் வாக்குமூலங்கள், பொலிஸாரால் பதிவுசெய்யப்பட்டன. இவ்வாக்குமூலங்களின்படி - சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் காவலாளியான செல்லப்பா இரத்தினம் (வயது 60) என்பவர், நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நேற்று யாழ். நீதிமன்றின்முன் நிறுத்தப்பட்டார்.

இவரை, எதிர்வரும் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்ட யாழ்.நீதிபதி,

அச்சிறுவர் பராமரிப்பு நிலையத்தை நிர்வகிக்கும் திருமதி வசந்தகுமாரி நித்தியானந்தம் என்பவரையும், அங்கு கடமைபுரிந்த இரு ஆசிரியைகளையும் எதிர்வரும் 25 ஆம் திகதி மன்றிற்கு அழைத்துவரும்படி, நீதிமன்றப் பிஸ்கால் ஊடாக அறிவுறுத்தல் அனுப்புமாறு நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டார்.

இச்சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் - 20 சிறுவர்களும், 14 சிறுமிகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (லி)

# சகல அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் ஒருங்கிணைக்கப்படும்

## யாழ்.செயலகக் கூட்டத்தில் முக்கிய முடிவு

யாழ்.மாவட்டத்தில் செயற்படும் அனைத்து அரசசார்பற்ற நிறுவனங்களினதும் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இவ்விடயம் தொடர்பாக, நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் - யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி திலகநாயகம்போல் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில், விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை ஆகியோருடன் யாழ். மாவட்ட பிரதேச செயலாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களின், அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தின்போது - உள்ளூரில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்தையும் ஒன்றுசேர்த்து ஒரு பலமான அரச சார்பற்ற இணையம் ஒன்றினை உருவாக்குவது தொடர்பாக ஆராயப்பட்டதுடன், இதன்மூலம் வெவ்வேறு நிறுவனங்களாலும், அமைப்புகளாலும் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைப்பது தொடர்பாகவும் பேசப்பட்டது. (அ)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிக்கு உதவுவதற்கு மதியுரைஞர்கள் குழு!

யாழ்.மாவட்டத்தில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை - நடாத்துவதற்கும் பொருத்தமான ஆலோசனைகளை வழங்குவதற்கும் விசேட மதியுரைஞர் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள துறைசார்ந்த வல்லுநர்கள் பலரை இணைத்து, இம் மதியுரைஞர் குழு உருவாக்கப்படவிருக்கிறது.

பல்வேறு துறைசார்ந்த அறிஞர்கள் பதினைந்துபேரைக் கொண்டதாக இக்குழு இயங்கும். குடாநாட்டில் செயற்படுத்தப்படவிருக்கும் செயற்திட்டங்கள் தொடர்பாக, இக்குழு மதியுரை வழங்கும் அமைப்பாகச் செயற்படும்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

"இலங்கை இனப்பிரச்சனைக்கான தீர்வும் உலகளாவிய சவாலும்" என்ற தலைப்பில் கருத்தரங்கு நாளை நடைபெறவுள்ளது.

நாளை மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் இக்கருத்தரங்கில் - யாழ்.பல்கலைக்கழக அரசியற்துறை விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் கருத்துரை வழங்கவுள்ளார்.

### அகாஷி...

அன்ரன் பாலசிங்கம், லண்டனில் இல்லாத காரணத்தினால் நான் அவரை சந்திக்க முடியவில்லை.

மாநாடு தொடர்பான பல விடயங்களை நான் அவருக்கு கடிதங்கள் மூலம் அறிவிக்க இருக்கிறேன் என்றும் அகாஷி மேலும் தெரிவித்தார்.

அதேவேளை - ரோக்கியோ மாநாடு தொடர்பான முடிவுகளை வன்னியில் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்திற்கு மின் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் ஜப்பானிய அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# ரணிலின் ரோக்கியோ உரை; ஆராய்வதற்கு ஏழுபேர் குழு!

ரோக்கியோவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரையைப் பரிசீலனை செய்வதற்கு, பொதுஜன ஐக்கிய முன்னணி ஏழு பேர் அடங்கிய குழு ஒன்றை நியமித்துள்ளது.

ஜனாதிபதியின் தலைமையில் கூடிய செயற்குழுவின் கூட்டத்திலேயே, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையிலான இக்குழுவில், மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன, சுதந்திரக் கட்சிச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, டி.எம். ஜயரத்ன, டாக்டர் திஸ்ஸ விதான, டி.யு.குணசேகர ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலை, இடைக்கால நிர்வாக சபை பற்றியும், நேற்றைய செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

# ஜப்பான் பிரதிநிதிகள் வன்னிக்கு; உறுதியான தகவல்களில்லை!

(கொழும்பு)

ரோக்கியோ மாநாட்டின் விளைவுகள் குறித்து எடுத்துக் கூறுவதற்காக, ஜப்பான் அரசின் பிரதிநிதிகள் வன்னிக்குச் செல்வது தொடர்பான எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

மேற்படி விடயம் குறித்து, கொழும்பில் உள்ள ஜப்பானியத் தூதரகம் உறுதிப்படுத்தப்பட்ட தகவல் எதையும் நேற்று இரவுவரை வெளியிடவில்லை.

ஜப்பானின் விசேட பிரதிநிதிகள் வன்னிக்குச் சென்று, ரோக்கியோ மாநாடு தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு விளக்கமளிப்பதற்கு, ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், இச்சந்திப்பிற்கான ஏற்பாடுகள் நேற்றுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதை, ஜப்பானியத் தூதரகம் உறுதிப்படுத்தியது.

### பல்லாயிரக்...

வேண்டுமென வலியுறுத்தி, யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல்களில் பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள், கடந்த பலநாட்களாக- தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் வடக்கு, மேற்கு போன்ற பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள், அரச நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள் போன்றவற்றுக்குச் சென்று, ஆயிரக்கணக்கான மக்களையும், மாணவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இராணுவம் வெளியேறவேண்டும் என்ற கருத்துக்களையே அனைத்து மக்களும் கூறிவருவதுடன், நிச்சயமாக இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொள்வதாகத் கூறிவருவதாகவும் பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

### ரோக்கியோவில்...

கொள்ள, புதியதொரு அமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

இப்போதைக்கு, அமெரிக்கா - சிறியளவிலான நிதியுதவியையே வழங்கினாலும், காங்கிரஸில் புதிய பிரேரணையைக் கொண்டுவந்து, மேலதிக நிதியுதவிகளை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வுக்கு ஒதுக்கப்பட்ட நிதி, வேறு தேவைக்குப் பயன்படுத்தப்படாது. அங்கு புனரமைப்பு நடவடிக்கைகள் புலிகளுடன் இணைந்தே மேற்கொள்ளப்படும.

குறிப்பிட்ட காலத்துக்குள் திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்பதில் சர்வதேச சமூகம் மிகவும் அவதானமாக இருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# ரோக்கியோவில் ரணில்...

உதவி வழங்கும் சமூகத்திற்கு விடுத்த அறிவிப்புக்கு எதிரிடையாகவே, விடுதலைப் புலிகளின் தலைமை பிரேரித்ததற்கும் அரசாங்கம் வழங்க முன்வந்ததற்கும் தீவிரமான வேறுபாடுகள். இருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் பரந்த பங்கேற்புடனான, வட - கிழக்கிற்கான அரசியல் நிர்வாகக் கட்டமைப் பொன்றை, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பாக எமது தலைமை பிரேரித்திருக்கின்ற நிலையில் - இலங்கை அரசாங்கமோ, பிராந்தியத்திற்குரிய அபிவிருத்திக்கான கட்டமைப்பையும், பொறிமுறையையும் கொண்ட சபை ஒன்றையே தந்திருக்கிறது.

இதற்கு, வலுவான நிறுவனமயப்படுத்தப்பட்ட, இனத்துவேஷத்தை உள்ளடக்கிய, தமிழ்மக்கள் பல தசாப்த காலமாகப் போராடிவருகின்ற - சட்டங்களுக்கும், அரசியலமைப்புக்கும் பின்னால் பிரதமர் மறைந்து கொள்கின்றார்.

**அரசியற்தீர்வு விடயத்திலும் அரசிடம் வேறுபட்ட பார்வையே!**

மேலும் - நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டுவரும் இனப்பிரச்சினைக்கு, அரசியற்தீர்வு காணும் விடயத்திலும் விடுதலைப் புலிகளோடு, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் முற்றிலும் வேறுபட்ட பார்வைகளையே கொண்டிருக்கிறது.

தற்போதுள்ள அரசியலமைப்பின் மறுசீரமைப்புக்களை, பகுதிபகுதியாக மனக்கண்ணால் பிரதமர் பார்க்கின்றபோது,

விடுதலைப் புலிகள் - தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையையும், தாயகத்தையும் அங்கீகரிக்கக்கூடிய, புதிய, மதச்சார்பற்ற, நேர்மையான நிறுவனமயமாக்கப்பட்டதாக - இலங்கையின் அரசாங்க அமைப்பில் அடிப்படையான மாற்றத்தைப் பிரேரித்திருக்கின்றனர்.

எமது அமைப்பால் கோரப்படும் இடைக்கால நிர்வாக அமைப்பையே அங்கீகரிக்க மாட்டாதபோது - ரணில் விக்கிரமசிங்கவின் எளிதில் உடையக்கூடிய ஆளும் கூட்டணிக்கு இது இயலாததொரு இலக்காகவே இருக்கும் எனவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

**வெளிச்சக்திகளின் தலையீட்டால் குழப்பத்திற்குள்ளாகிறது அமைதிமுயற்சி!**

இதேவேளை - பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புக்களால் தீர்க்கப்பட்டாக வேண்டிய உள்ளக அரசியல் விவகாரமாக இனப்பிரச்சினை இருக்கும்போது - இந்த மண்ணுக்குச் சம்பந்தமில்லாத, வெளிச் சக்திகளின் மிதமிஞ்சிய, வேண்டத்தகாத தலையீடுகளை அனுமதிப்பதன் மூலம் அமைதி முயற்சிகளை - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குழப்பத்திற்குரியதாக்கி வருவதாகவும் விடுதலைப் புலிகள் சாடியிருக்கின்றனர்.

**அனுசரணை நிலையிலிருந்து ஆதிக்கமிகு மத்தியஸ்தத்திற்கு!**

நாட்டின் பொருளாதார, அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக - அரசாங்கத்தின் தீவிரமான பொருளாதார அரசியல் வங்குரோத்துத்தனம் 'சர்வதேச பாதுகாப்பு வலைக்குள்' அரசாங்கத்தைச் சரணடைய நிர்ப்பந்திக்கின்றது. இந்த 'சர்வதேச பாதுகாப்பு வலையை' நாடுவதற்காக கொழும்பு அரசாங்கம், அமைதி முயற்சிகளை மூன்றாம் தரப்பு அனுசரணை நிலையிலிருந்து - இந்தத் தீவின் அரசியல் பொருளாதாரத் தலைவிதியை, வெகுதொலைவிலுள்ள முடிவாக்கும் - பயங்கரமான வெளிச்சக்திகளின் ஆதிக்கம்மிக்க சர்வதேச மத்தியஸ்த நிலைக்கு மாற்றியிருக்கிறதெனவும் விடுதலைப் புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ரோக்கியோ பிரகடனங்கள் புலிகளைக் கட்டுப்படுத்தாது!**

ரோக்கியோ மாநாட்டில் உதவி வழங்கும் சமூகத்தால் முன்வைக்கப்பட்ட தீர்வுகள், பிரகடனங்கள் தம்மை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது எனக் குறிப்பிட்டுள்ள விடுதலைப் புலிகள்,

இந்தப் பிரகடனங்கள் பற்றிய விவாதத்திலோ அல்லது அவற்றை உருவாக்குவதிலோ விடுதலைப் புலிகள் பங்கேற்கவில்லை. ரோக்கியோ பிரகடனத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட எந்தப் பிரேரணைகள் பற்றியோ முடிவுகள் தொடர்பாகவோ தம்முடன் ஆலோசிக்கப்படவில்லை எனவும்,

கொழும்பு அரசாங்கம் தனது அனுசரணையாளர் உதவியுடனும், சர்வதேச 'தந்திரோபாயக் கூட்டாளிகளுடனும்' செய்துகொண்ட இந்தத் தந்திரமான பத்திரம், விடுதலைப் புலிகளின் மீது திணிக்கப்பட்டிருக்கிறது. இதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் விடுதலைப் புலிகள் உறுதிபட அறிவித்துள்ளனர்.

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.97 | 97.44 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 160.65 | 162.11 |
| 1 யூரோ | 112.96 | 114.18 |
| 1 சுவிஸ் பிராங் | 73.05 | 73.95 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 63.56 | 64.48 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.83 |
| 1 சவூதி றியால் | 25.95 | 25.95 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.